# தந்தை செல்வா அறங்காவல் குழுவினர் மீது சி.ஐ.டி. பொலிசார் விசாரணை

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1979
PERIODICALS DIVISION
LIBRARY
CAMPUS

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8945/78

மலர்: 21 பங்குனி 13 ரபி-ஆகி 27 இதழ்: 44
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-3-79

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவரும் செயலாளரும் நேற்று, கொழும்பிலிருந்து வந்த இரகசியப் பொலிஸாரினால் விசாரணைசெய்யப்பட்டனர்.

இரகசியப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு புசல்ல தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஐந்து இரகசியப் பொலிசார் மேற்படி விசாரணையை நடத்தினர்.

தந்தை செல்வா அறங்காவல் குழுவினரின் அறப்போர் பயிற்சி சம்பந்தமாக அறங்காவல் குழுத்தலைவர் திரு கு நேசையா, மற்றும் செயலாளரும், அறப்போர் பயிற்சி அமைப்பாளருமான திரு. க சச்சிதானந்தன் ஆகிய இருவரையும் திவிர விசாரணைசெய்த இரகசியப் பொலிஸார்; கராட்டிப் பயிற்சி, துப்பாக்கிசுடும்பயிற்சி மற்றும் வெளிநாட்டு உதவிகள். டென்மார்க்கைச் சேர்ந்த திருமதி துத்சிலிமனின் யாழ் விஜயம்பற்றி யெல்லாம் துருவியமாகக் கேள்விகள் கேட்டனர் என்று தெரியவருகிறது.

அகிம்சை, சாத்விகப் போராட்டம்பற்றியே பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்றும், தமிழர் சமுதாய முன்னேற்றத்துக்கான அகிம்சை வழிவகைகள் பற்றியே பயிற்சி அளிக்கப்படுகின்றன என்றும் வன்முறையில் சிறிதளவும் தங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றும் அட்படியான நோக்கங்களில் தங்களுக்கு நம்பிக்கை கிடையாது என்றும் திரு. சச்சிதானந்தன் எழுத்தில் கொடுத்திருந்தார்.

இரகசிய பொலிசார், கைதடியிலுள்ள சைவ அநாதைகள் இல்லத்துக்கும் விஜயம்செய்திருந்தனர்.

# தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க

# நியாயமான ஒரே தீர்வு

# தமிழ் ஈழமே!

## பத்திரிகையாளர் மத்தியில் கூட்டணிஎம்.பிக்கள்கருத்து

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான மிக நியாயமானதீர்வு தமிழ்ஈழம் ஒன்றேதான். இதை விட வேறு நியாயமான தீர்வு எதுவும் இருக்க முடியாது" என்று யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரியாளரின் கலந்துரையாடலின்போது நிருபர்களின்கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகைகளைச் சேர்ந்த 50 பத்திரிகையாளர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

### கூட்டணி எம். பிக்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்களான திரு வாளர்கள் எஸ். கதிரவேலுப்பிள்ளை, வி. என், நவரத்தினம், வி. தருமலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னண்டோவும் இதில் கலந்துகொண்டார்.

நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சாவகச்சேரி எம். பி திரு. வி, என் நவரத்தினம்! "இரண்டு இனங்கள் வாழும் நாட்டில் இரு இனங்களினதும் சுயநிர்ணய உரிமையும் அடிப்படை உரிமைகளும் அங்கீகரிக்கப்பட்டாலன்றி ஒரே நாட்டில் அவை ஒற்றுமையாக வாழமுடியாது" என்றார்.

### 1977க்குப் பின்னர்

கோப்பாய் எம். பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறுகையில்!

1977 ஆகஸ்ட் வைவரத்துக்குப் பின் தனிநாடு கோரிக்கை வலுவடைந்திருக்கிறது என்றார்.

99 வீதமான தமிழ்மக்களும் தனிநாடு கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறார்களா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு.

### மக்கள் ஆணை

"கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் அந்த ஆணையை எமக்குத் தெளிவாக அளித்திருக்கிறார்கள். அது இன்னமும் மாற்றப்படவில்லை" என்று யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

### சுவீடன் ஆராய்ச்சியாளர்

சுவீடன் ஆராய்ச்சியாளரான திருமதி ஏவா ஜோன்சன் ஒன்போர்ஸ் என்பவரும் இந்தக் கலந்துரையாடலின்போது கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்தார்.

வெளிநாட்டு நிருபரான செல்வி லாரா ஹெஸ்கொத்தும் கலந்துகொண்டு பல கேள்விகளை எழுப்பினர். [ச-ப]

## சூறாவளி பகுதிகளில் மேமாதத்தில் ஜி. ஸி. ஈ.

[கொழும்பு]

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி ஸி ஈ [சாதாரண] பரீட்சைக்குத் தோற்றியவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் சித்திபெற்றுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 2,40,000 மாணவர்களில் 68, 250 பேர் சித்தி பெற்றனர். 9, 400 பேர் நூனசித்தியடைந்தனர். இவர்களில் 77, 000 பேர் உயர் வகுப்பில் பயில தகைமை பெற்றுள்ளனர்.

மேற்கண்ட விபரங்களை வெளியிட்ட கல்வி அமைச்சு சூறாவளியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் விசேட ஜி. ஸி. ஈ. பரீட்சை இவ்வருடம் மே மாதத்தில் நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

## கிளிநொச்சியில்

[கிளிநொச்சி]

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை மாலை கிளிநொச்சி ஞெட்றிக்கோ மைதானத்தில் அரசகுமாரன் தலைமையில் நடைபெறும்.

## 'டி.வி.' யில் அமிர்-வாஜ்பாய்

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் — இந்திய வெளி விவகார அமைச்சர் திரு ஏ பி வாஜ்பாய் சந்திப்பு தொலைக்காட்சி (டி, வி) யிலும் இடம்பெற்றது

நேற்று முன்தினமிரவு சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சியில் எட்டு மணிக்கு நிகழ்ந்த தமிழ்ச் செய்தியிலும் அடுத்து இடம்பெற்ற ஆங்கிலச் செய்தியிலும் அமிர் தம்பதிகளுடன் இந்திய அமைச்சர் வாஜ்பாய் நிகழ்த்திய உரையாடல் காட்சி இடம்பெற்றது.

மேற்படி 'டி வி' நிகழ்ச்சியை யாழ்ப்பாணத்திலுள்ள சில தொலைக்காட்சிகளிலும் மிகத்தெளிவாகக் காணக் கூடியதாகவிருந்தது.

## தரமற்ற மா விநியோகம்?

# பாண் தயாரிப்பு பாதிக்கப்படலாம்!

(யாழ்ப்பாண)

தரமற்ற மா விநியோகத்தினால் பாண் தயாரிப்பு யாழ் மாவட்டத்தில் முற்றுகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் எதிரொலியாக பேக்கரிகளை மூடவேண்டிய சூழ்நிலையும் உண்டாகலாம் என்றும் வட மாகாண பாண்பேக்கரி சங்கத் தலைவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

"கடந்த இரண்டு வாரங்களாக பேக்கரிகளுக்கு தரமான மா விநியோகிக்கப் படாததனால், பாணும் தயாரிக்க முடியவில்லை. பநோசு சங்கத்தினால் விநியோகிக்கப் படும் மாவினால் தயாரிக்கப் படும் பாண் தரமாக அமையாததினால் இந்தப் பாணை விற்பனைசெய்ய முடியவில்லை இதனால் பேக்கரிகளுக்கு தினசரி நூற்றுக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்படுகிறது இந்த நிலை நீடிக்குமானால் பேக்கரிகளை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்" என்று மேற்படி சங்கத் தலைவர் திரு கிறிஸ்தோபர் துரைசிங்கம் விடுத்த அறிக்கையில் கவலைதெரிவித்துள்ளார். (கொச். நி)

## "தரமற்ற பவுணையே வியாபாரிகள் விற்கின்றனர்"

### ஆபரணத் தொழிலாளர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

"இலங்கையிலுள்ள நகைக் கடைகளில் ஒருசிலவற்றைத் தவிர எல்லாக்கடைகளிலுமே 22 கரட் என்று கூறி மிகவும் தரம் குறைந்தவற்றையே விற்பனை செய்வதால் ஆபரணத் தொழிலாளருக்கு அபகீர்த்தியையும் பொதுமக்களுக்கு பெரும் நஷ்டத்தையும் வியாபாரிகள் ஏற்படுத்துகின்றனர். இந்த அபாயத்திலிருந்து காப்பதற்காக இந்தியாவிலிருப்பது போல் மத்தியஸ்தக் கடைகளை இங்கும் அமைக்க அரசுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டும்."

இவ்வாறு யாழ் நாவலர் பாடசாலையில் நடைபெற்ற ஆபரணத் தொழிலாளர்சங்க பொதுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய திரு மு பொன்னுச்சாமி குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது!

"உலகச் சந்தையில் பவுணின் விலை மிகக்குறைவாக இருக்கின்றபோதும், இலங்கையில் நகைவியாபாரிகள் மிகவும் கூடிய விலைக்கே விற்கின்றனர். இதனால் ஆபரணத் தொழிலாளர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இத்தொழிலையே நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் பவுண்விநியோகத்தை சீராகச் செய்வதில்லை.

## ஒப்பந்தம் கைச்சாத்து

(வாஷிங்டன்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேலிய—எகிப்து சமாதான ஒப்பந்தம் இன்று (இலங்கை நேரப்படி அதிகாலை 4 மணிக்கு) கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் எகிப்திய அதிபர் அன்வர் சதாத், இஸ்ரேலிய பிரதமர் பெகின், அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து சில அரபுநாடுகளில் நேற்று பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது.

## வடபகுதி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

டார்கள்.

நிருபர்; இயக்கம் சக்திவாய்ந்த இயக்கமா?

### சக்திவாய்ந்த இயக்கம்

எஸ்.பி: ஆம் இளைஞர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள் வெளி நாட்டைச் சேர்ந்தவை. கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளைக்குப் பாவிக்கப்பட்ட கைத்துப்பாக்கி 1940 ம் ஆண்டு திருமலைப்பகுதியில் வாங்கியதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

கட்டுவனில் ஒரு சம்பவம் நடந்தது. 2 பொலிஸார் ஆயுதமின்றி ரோந்து சுற்றிவந்தனர் அப்போது நள்ளிரவில் 3 இளைஞர்கள் சைக்கிளில் வந்தனர். அவர்களைப் பொலிஸார் மறித்துச் சோதனையிட முயன்றபோது, 3 இளைஞரும் துப்பாக்கியால் பொலிஸாரை நோக்கிச் சுட்டனர், ஒருவர் காயமடைந்தார்; இளைஞர்கள் தப்பிவிட்டனர்.

### குற்றவாளிகளை எப்படிக் கண்டிப்பது?

பருத்தித்துறைப்பகுதியில், இரு பொலிஸார் ஆயுதமின்றிக் கடமைக்குச் சென்றபோது 3 இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டி எச்சரித்துத் திருப்பியனுப்பிவிட்டனர். பின்பு அந்த இடத்திற்கு ஜீப்பில் பொலிஸார் சென்றபோது, இளைஞர்கள் மறைந்துவிட்டனர். இந்த நிலையில், எப்படிப் பொலிஸார் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது? எப்படி விசாரணை செய்வது?

இன்ஸ்பெக்டர்: மற்றொரு கொள்ளையில், அடையாள அணிவகுப்பில் நின்றவர்கள் மாணவர்கள். அடையாளம் காட்டவந்தவர் அவர்களைபடிப்பித்த ஆசிரியர், மாணவர்களை நன்கு தெரிந்தும், பயத்தினால், அடையாளம் காட்டாமல் சென்றுவிட்டார் இந்நிலையில் ஒரு வழக்கை எப்படி நிரூபிக்க முடியும்.

### கிறிமினல் சிவகுமாரனுக்கு சிலை நிறுவினர்

எஸ். பி: சிவகுமாரன் பல குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய ஒரு கிறிமினல் பேர்வழி, கொலைமுயற்சி கொள்ளை முயற்சியில் சம்பந்தப்பட்டவர். அவருக்கு உரும்பராயில் சிலை எழுப்பியிருக்கிறார்கள். கிறிமினலுக்கு நாட்டில் எங்காவது சிலைஎழுப்பும்வழக்கம் உண்டா? நீங்கள் அந்தச்சிலையை போகும் போது பார்க்கலாம்.

நிருபர்: சிவகுமாரன் எப்படி இறந்தார்?

இன்ஸ்பெக்டர்: தற்கொலை செய்துகொண்டார். பொலிஸில் சிக்க விரும்பாமல், நச்சுக்குளிகை விழுங்கி இறந்தார். அவரின் மரணவீட்டிற்கு எம். பிக்கள் சென்று உரைநிகழ்த்தினார்கள். வருடாவருடம் எம். பி.க்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

நிருபர்; இப்படி வேறு யார் இருக்கிறார்கள்?

எஸ். பி: இன்னும் சிலருண்டு. எம். பி. யாக உள்ள சட்டத்தரணிகள்தான் கோர்ட்டில் அவர்களுக்கு ஆஜராகின்றனர்.

நிருபர்: ஏன் மக்கள் பொலிசாருக்கு உதவுவதில்லை?

### பொலிசார்தான் துன்புறுத்தப்பட்டனர்

இன்ஸ்பெக்டர்: மக்கள்தாக்கப்பட்டால் பலர் தலையிடுகிறார்கள். பொலிசார் தாக்கப்பட்டால், எம் பி. கூடஎட்டிப் பார்க்கமாட்டார். வடக்கைப் பொறுத்தவரை பொதுமக்களால் பொலிசார்தான் துன்புறுத்தப்படுகிறார்கள்.

எஸ். பி: சட்டப்படிவழக்கு நடத்தமுடியவில்லை. சாட்சிகள் கொல்லப்படுகிறார்கள். இந்த நிலையில், பொலிசார் எவ்வளவு கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

பத்திரிகையாளருக்குப் பொலிசார் குளிர்பானம் வழங்கினார்கள். அங்கிருந்து நேரடியாகப் பருத்தித்துறை வாடிவீட்டிற்குப் புறப்பட்டோம். அங்குதான் நண்பகல் போசனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (வளரும்)

## இன்றைய பலன்

பங்குனிமாதம் 13-ம் திகதி

(27-3-1979)

செவ்வாய்க்கிழமை

**மேடம்:** சூழ்ச்சிகள் உருவாகும், சிறுபிணிக்கும் இடமுண்டு, தற்பெருமைமூலம் தடுமாற்றம் தென்படும், நிதானம் அவசியம்.

**இடபம்:** ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும், கல்வியில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவுக்கும் இடமுண்டு.

**மிதுனம்:** உறவினர் வருகை உங்களுக்கு மகிழ்ச்சி தரும், புதிய நண்பர்கள் புடைசூழ்வர், புத்திரர் பெருமையும் உண்டு.

**கடகம்:** கருத்தினில் மோசம், பகைமூட்டம் தோன்றும், பதட்டம் உடன்சேரும், வாட்டிடும் பிணியும்தானே.

**சிங்கம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி, வாழ்க்கையில் வசந்தம் தோன்றும, செலவுகள் கட்டுப்படியாகவே இருக்கும்.

**கன்னி:** முயற்சியில் முட்டுக்கட்டை மெதுவடும, நண்பர்களின் தொல்லை, சிலருக்கு உடல் நலனும் பாதிக்கப்படலாம்.

**துலாம்:** தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், தெய்வநம்பிக்கை மேலிடும், இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**விருச்சிகம்:** உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், வெளியிடத்துச் செய்திக்கும் இடமுண்டு, சுகபோக நாள்.

**தனுசு:** புதுமையில் நாட்டம் காணும், விவசாயிகள் விருத்தியடைவர், எதிர்பாராத வரவுகளுக்கும் இடமேற்படும்.

**மகரம்:** பலவழிகளிலும் தொல்லைகள் தோன்றும், நலிவு தோன்றும், பொருள் விரயத்திற்கும் இடமுண்டு.

**கும்பம்:** சுறுசுறுப்புக் குன்றும், குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றி மறையும், கொள்கையில் மாற்றமும் காணும்.

**மீனம்:** மனம் நிறைந்த வாழ்வு, நண்பர்கள் மத்தியில் கலகலப்புத் தென்படும், இனிய வார்த்தைகள் மூலம் காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள்.

சோதிடக்கலாநிதி

**திருமலை க. வேலுப்பிள்ளை**

## சாரதிக்குப் பிணை

[வேலணை]

வயோதிபர் ஒருவரை பஸ் வண்டியால்நெரித்துக்கொன்றதாகக் கூறப்படும் வழக்கொன்றில், சம்பந்தப்பட்ட பஸ் சாரதி 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

வேலணை துறைமுகத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இவ்விபத்தில் புங்குடுதீவு இறுபிட்டியைச்சேர்ந்த திரு. கனகசபை என்னும் வயோதிபரே பலியானார்.

இதுகுறித்து சம்பந்தபட்ட சாரதியான புங்குடுதீவைச் சேர்ந்த திரு. செல்வரத்தினம் என்பவரை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி சம்பந்தப்பட்ட சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 29ந்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

தேசிய லொத்தர் சபை தலைமைக் காரியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 711-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**29 Q 0191**

ரூபா 1,00,000

2-வது பரிசு:

**20 H 0801**

ரூபா 40,000

3-வது பரிசு:

**22 K 0809**

ரூபா 10,000

தலா 1,581 ரூபா கொண்ட 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0185 | 20 B 0343 |
| 02 C 0147 | 19 C 0319 |
| 24 C 0643 | 08 D 0980 |
| 17 D 0583 | 21 D 0063 |
| 23 D 0376 | 29 D 0388 |
| 30 D 0662 | 30 D 0783 |
| 06 E 0253 | 13 E 0088 |
| 13 E 0573 | 11 F 0229 |
| 13 F 0207 | 23 F 0654 |
| 24 F 0694 | 13 G 0342 |
| 19 G 0580 | 24 G 0067 |
| 25 G 0952 | 26 G 0931 |
| 04 H 0118 | 05 H 0643 |
| 06 H 0590 | 17 H 0473 |
| 18 H 0067 | 07 J 0521 |
| 11 J 0015 | 04 K 0950 |
| 08 K 0978 | 24 K 0703 |
| 24 K 0962 | 05 L 0673 |
| 15 L 0641 | 16 L 0026 |
| 01 M 0 59 | 08 M 0982 |
| 20 M 0863 | 29 M 0489 |
| 30 M 0652 | 12 N 0890 |
| 14 N 0548 | 16 N 0042 |
| 18 N 0368 | 25 N 0171 |
| 03 O 0593 | 23 O 0778 |
| 25 O 0407 | 31 O 0800 |
| 05 P 0148 | 05 P 0636 |
| 13 P 0250 | 15 P 0629 |
| 25 P 0807 | 02 Q 0354 |
| 28 Q 0982 | 10 R 0635 |
| 11 R 0787 | 15 R 0881 |
| 19 R 0849 | 26 R 0040 |
| 28 R 0528 | 09 R 0940 |
| 10 S 0442 | 13 S 0799 |
| 18 S 0352 | 20 S 0143 |
| 21 S 0183 | 26 S 0779 |
| 03 T 0864 | 10 T 0802 |
| 18 T 0283 | 23 T 0750 |
| 29 T 0354 | 06 U 0443 |
| 22 U 0804 | 30 U 0872 |
| 03 V 0150 | 04 V 0369 |
| 04 V 0666 | 07 V 0308 |
| 21 V 0878 | 32 V 0202 |
| 01 W 0530 | 05 W 0181 |
| 09 W 0359 | 15 W 0069 |
| 28 W 0064 | 09 X 0633 |
| 20 X 0604 | 21 X 0436 |
| 24 X 0747 | 06 Y 0342 |
| 25 Y 0784 | 20 Z 0265 |
| 28 Z 0073 | 28 Z 0490 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை]

## ஒரு வருடத்திற்கு முன் திருடிய வானொலிப்பெட்டி

[யாழ்ப்பாணம்]

சந்தேகத்திற்குஇடமான முறையில் வீதியில் நடமாடிய ஒருவரைப் பொலிசார் கைது செய்து விசாரணை செய்தனர்.

இவரைக்கைதுசெய்தஆனைக்கோட்டைப் பொலிசார் மேலும் விசாரணையை மேற்கொண்டபோது, 1977-ம் ஆண்டு, நவாலி மேற்கைச் சேர்ந்த கனகரெத்தினம் நகுலேந்திரன் என்பவருடைய வானொலியைத் திருடியது தெரியவந்தது.

இதுதொடர்பாக நவாலியைச்சேர்ந்த நாகேஸ் கணேஸ்வரன் [29 வயது] என்பவர் மீது ஆனைக்கோட்டைப்பொலிசார் யாழ். நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல்செய்த போது யாழ். நீதிபதி திரு. விமல் இசுறுயக்கா எதிரியை ஏப்ரல் 3ம் திகதிவரை றியாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். [கொக்.]

## தற்கொலை

[புலோலி]

நோயின் கொடுமை தாங்க முடியாத சீவல் தொழிலாளி ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

பருத்தித்துறையிலுள்ள குடத்தனைக் கிராமத்தைச் சேர்ந்த நாகன் விநாசி என்பவரே இவ்விதம் மரணத்தைத் தழுவிக்கொண்டவராவர் இவரது மரணப்குறித்து விசாரணையை வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம் வி புவனேந்திரன் மேற்கொண்டார். பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் நெல்சன் ஞானசேன சாட்சிகளை ஆஜர்செய்தார்

இறந்தவரின் மகளான சின்னம்மா சாட்சியமளிக்கையில் தனது தகப்பனார் சீவல் தொழிலுடன் தோட்டமும் செய்து வந்ததாயும், கடந்த சில வருடங்களாகத் தொய்வுநோய் காரணமாக இவர் எத்தொழிலும் செய்வதில்லை என்றும் தற்போது பனிகாலமாகையால் அவருக்கு வருத்தம் கூடுதலாக இருந்தது அவர் முன்பும் பலமுறை தற்கொலை முயற்சியிலீடுபட்டிருந்தார் என்றும், நோய் தாங்கமுடியாமையினாலேயே அவர் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

இறந்தவரின் மனைவி சின்னாச்சி, மைத்துனர் வயிரவன், ஆகியோரும் சாட்சியமளித்தனர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## பொய்ப் புகார் செய்தவர் கைது

[புலோலி]

பொலிசாருக்குப் பொய்ப் புகார் செய்திருந்த நபரொருவர் சங்கடத்தில் மாட்டிக்கொண்டார்.

குடவத்தையைச் சேர்ந்த கணபதி சிதம்பரநாதன் என்பவரே பருத்தித்துறைப் பொலிசில் பொய்ப்புகார் செய்தவராவர். இவர் தனது புகாரில் தானும் பஞ்சலிங்கம் என்பவரும் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்சில் பிரயாணம் செய்ததாகவும் தாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்ததும் இறங்கும்போது இதே பஸ்சில் வந்த நல்லான் அழகன் என்பவர் தனது சேட்டிற்குள் இருந்த ரூபா 2175ஐ கொள்ளையடித்ததாகவும் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இப் புகார் சம்பந்தமாக விசாரணை நடத்திய சார்ஜன் திரு. செல்லையா மாணிக்கராசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணையின் பின்னர் புகார் பொய்யானதென்பதை அறிந்து, பொய்ப்புகார்செய்த இந் நபரை கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் திரு சே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது பொய்ப்புகார் செய்த இந்த எதிரிக்கு தண்டனை வழங்குவதற்காக மீண்டும் இவர் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென நீதவான் கட்டளையிட்டார். (கு-அ)

## படக்காட்சி

[பண்டத்தரிப்பு]

அரசாங்க தகவல் திணைக்களத்தின் இலவச திரைப்படக் காட்சி இன்று செவ்வாய்க்கிழமை மாலை தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தின் முன்றலில் காண்பிக்கப்படவுள்ளது. [ஈ]

## நாடு திரும்புகிறார்

[பண்டத்தரிப்பு]

ஜப்பான் நாட்டிற்கு விஜயம் செய்துள்ள வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா. திருநாவுக்கரசு இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது. திரும்பிவரும் வழியில் சிங்கப்பூருக்கும் இவர் விஜயம் செய்வார் என்றும் தெரியவருகின்றது. [ஈ]


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தமிழ், ஆங்கில தட்டச்சுக்கள், டுப்ளிகேற்றர் ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீ மீனாட்சி வர்த்தகக் கல்லூரி, 38, சினிவாசகம்வீதி, யாழ்ப்பாணம். 1996

நல்ல நிலையிலுள்ள 8 ஸ்ரீ தொடர் பிலக்கமுடைய மொறிஸ் மைனர் 1000 உடன் விற்பனைக்குண்டு. காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு, குமரன் டூறிஸ்ட் இன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7753 (2001)

### பயிற்சி

ஆங்கிலம் சிறந்த சுலபமான முறையில் திரு. வ. பொன்னம்பலம் M. A. நடாத்துவார். உடன் தொடர்பு கொள்ளவும், NATIONAL INSTITUTES, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1959

### தேவை

சண்ணடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும், சேவி கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 1985

அலுமினியம் தொழிற்சாலைக்கு ஸ்பின்னிங் (Spinning) வேலையில் நன்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை. அனஸ் அன் கோ., நிர் 1, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். 2008

## பிறந்ததின வாழ்த்து



செல்வி

ரஜனி நடராசா

அனலைதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா தம்பதிகளின் செல்வப் புதல்வி ரஜனி தனது முதலாவது பிறந்தநாளை இன்று 27-3 79 செவ்வாய்க்கிழமை கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், ஆகியோர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். 2009

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# வடபகுதிக் கொள்ளை இயக்கத்திற்கு அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கிறது

## தென்னிலங்கைப் பத்திரிகையாளரிடம் காங்கேசன்துறைப் பொலிஸ் அதிபர்

-- நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன் --

தென்னிலங்கை பத்திரிகையாளர் செல்லும் இடங்களுக்குச்சென்று பொதுமக்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ளும் விஷயங்களை அறிய விரும்பினேன். அரசாங்க செயலக ஜீப்' ஒன்றும் பத்திரிகையாளரின் விசேஷ பஸ்ஸுடன் செல்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனக்கும் அந்த 'ஜீப்பில்' வசதி செய்துதருமாறு அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோவிடம் முதல் நாளே கேட்டிருந்தேன். நிச்சயம் அதில் செல்லலாம் என அவர் தெரிவித்திருந்தார். அந்த நம்பிக்கையில் சுற்றுலாவிற்கு ஆயத்தமாகவே வந்தேன்.

கச்சேரியில் இளைஞர் இயக்கங்களுடன் கலந்துரையாடல் நடந்து கொண்டிருந்தபோது அரசாங்க அதிபர் என்னைப் பார்த்ததும் 'யோகா' நீரும் அந்த விசேஷ பஸ்ஸில் போகலாம்'' என்று தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து இரு பெண் பத்திரிகையாளர் உட்பட 30 பத்திரிகையாளர்கள் வந்திருந்தனர்.

சனிகாலை பஸ் சுற்றுலாவுக்குப் புறப்படத் தயாரானது. நான் முன்கூட்டியே பஸ்ஸில் ஏறி, கடைசி ஆசனத்தில் அமர்ந்துகொண்டேன். மூன்று நான்கு தமிழ்பேசும் நிருபர்களும் வந்திருந்தனர். பஸ் கீரிமலை நோக்கிப் புறப்பட்டது, என்முன் ஆசனத்தில் இரு சிங்களப் பத்திரிகையாளர்களும் என்னருகில் படப்பிடிப்பாளர் ஒருவரும் இருந்தனர்.

காலையில் டாக்டர் எஸ். சண்முகலிங்கம் தம்பதிகள், தங்கள் இல்லத்தில் பத்திரிகையாளர்களுக்கு விருந்துபசாரம் அளித்தனர். அதுபற்றியும் சிலர் பஸ்ஸில் பேசிக்கொண்டனர். வெள்ளி இரவு தொழிலதிபர் திரு யகேந்திரன் இராப்போசன விருந்தளித்தார்.

பஸ் முற்றவெளிநோக்கிச் சென்று கொண்டிருந்தது. மத்தியகல்லூரி மைதானத்தில் எக்கச்சக்கமான கூட்டம். எல்லாம் மாணவர்கள். சென்றல் — சென்ஜோன்ஸ் கிரிக்கெட்போட்டி நடந்து கொண்டிருந்தது. பஸ் அவ்வீதியால் மெதுவாகச்சென்று கொண்டிருந்தது. பத்திரிகையாளர் எல்லாரும் எட்டிப் பார்த்தார்கள்.

ஆஸ்பத்திரியைக் கடந்து செல்லும்போது முன் ஆசனத்தில் இருந்த நிருபர் ஆஸ்பத்திரியைச் சுட்டிக்காட்டி சிங்களத்தில் ஏதோ கூறினார், எனக்குச் சிங்களம் பேசவராது ஆனால் பேசுவது கொஞ்சம் விளங்கும்.

ஆஸ்பத்திரி வளவுக்குள் உள்ள கட்டிடத்தின் முன்னால் தனித்தமிழில் எழுதப்பட்டிருந்தது. அதுவும் பெரிய எழுத்தில். காலையில் கச்சேரியில், திரு யோகேந்திரா துரைசுவாமி கொழும்பிலுள்ள அரசாங்கக் காரியாலயங்களில் பெயர்ப் பலகைகள் தனிச் சிங்களத்தில் இருப்பதாகக் கூறினார். அதுதொடர்பாகத்தான் அந்த நிருபர் யாழ்ப்பாணத்தில் தனித்தமிழில் எழுதப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார். நான் அவர்களுக்கு விளக்கினேன். அது றோட்டரிக் கழகத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கட்டிடம் என்றும், அதில் அவர்கள் தனித்தமிழில் எழுதியிருப்பதாகவும் சொன்னேன் அவருக்கும் புரிந்துவிட்டது.

### கீரிமலை செல்லவில்லை

சுற்றுலா திட்டத்தில் கந்தரோடை இடம்பெற்றிருந்தது. ஆனால் இளைஞர் இயக்கக் கலந்துரையாடலுக்கு அதிக நேரம் செலவாகிவிட்டதால் கந்தரோடை செல்லவில்லை. வல்லிபுரம்கூட செல்ல முடியாமல் போய்விட்டது.

பத்திரிகையாளர் பலர் கீரிமலையில் குளிப்பதற்கு துவாய் எல்லாம் ஆயத்தமாகக்கொண்டு வந்திருந்தார்கள். ஆனால் கீரிமலைப்பக்கமே செல்லமுடியாமல் போய்விட்டது.

### "சுந்தரலிங்கம் கோயிலா?"

மாவிட்டபுரத்தைச் சென்றடைந்ததும், சில நிருபர்கள் ''இதுதான் 'சுந்தரலிங்கம்' கோயிலா?''என்று கேட்டபடி பஸ்ஸைவிட்டு இறங்கினார்கள். சிலர் கோபுரத்தைப் பார்த்து விளக்கம் கேட்டார்கள், இங்குதான் ஆலயப் பிரவேசப் பிரச்னை நடந்தது என்றும் கேட்டார்கள். எங்கள் ஜீப்புக்கு முன்னால் அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணாண்டோவும் காரில் சென்று கொண்டிருந்தார். அவர் முதலிலேயே மாவிட்டபுரத்தை அடைந்துவிட்டார்.

அரசாங்க அதிபர், மாவிட்டபுரம் கோவில்கட்டப்பட்ட வரலாற்றை பத்திரிகையாளருக்கு விவரித்தார். கீரிமலையில் நீராடியதால், குதிரைமுகம் மாறியதும், கோபுரம் கட்டப்பட்டதும், பத்திரிகையாளருக்கு விளக்கப்பட்டது.

பஸ்ஸுக்கு முன்னால் ஜீப்பில் திட்டமிடல் அதிகாரி லோகேஸ்வரன் மற்றும் கலாச்சார மன்ற உத்தியோகத்தர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

எங்கள் பஸ்ஸில் கச்சேரி உத்தியோகத்தரும் உதவியாளருமான திரு. கந்தசாமி சுற்றுலா ஆரம்பம்முதல் வந்து கொண்டிருந்தார்.

## பொதுமக்களைப் பொலிஸார் ஏன் துன்புறுத்துகின்றனர்?

### கொழும்பு நிருபர் கேள்வி

காங்கேசன்துறைக்குச் சென்று அங்கிருந்து 'தில்ஸ' விகாரைக்குச் சென்றோம். அங்கு பத்திரிகையாளர் பௌத்த குருமார்களைப் பேட்டி கண்டனர். சிங்களத்தில்தான் கலந்துரையாடல் இடம்பெற்றது. சிங்களம் தெரிந்த நண்பர் ஒருவர் மூலம் அந்தக் கலந்துரையாடலை அறிந்து கொண்டேன். அது பற்றி பின்னர் விபரமாகத் தருகின்றேன்.

இனி உங்களைக் காங்கேசன்துறைப்பொலிஸ் அதிபர் காரியாலயத்திற்கு அழைத்துச் செல்கின்றேன்.

பொலிஸ் அதிபர் திரு. வியோ பெரேராவும் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் மற்றும் பொலிசார் பத்திரிகையாளரை வரவேற்றனர். மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோவும் எங்களுடன் வந்திருந்தார்,

பொலிஸ் அதிபரை, நாங்கள் (பத்திரிகையாளர்) சுற்றிவளைத்துக் கொண்டோம்.

வடபகுதியில் உள்ள நிலைமைகள் பற்றிப் பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்புவதாகப் பொலிஸ் அதிபர் கூறினார். அவர் கூறிமுடிப்பதற்குள் ளேயே ஒரு நிருபர் கேள்விக்கணை தொடுத்துவிட்டார்.

நிருபர்: பொதுமக்களைப் பொலிசார் ஏன் துன்புறுத்துகிறீர்கள்?

எஸ். பி: துன்புறுத்துவதா?

நிருபர்: ஆம், பஸ்களிலும் வீதிகளிலும் பொதுமக்கள் இம்சிக்கப்படுகிறார்கள் அதனால்தான் பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயங்குவதாகக் கூறப்படுகிறது இது பற்றி என்னசொல்லுகிறீர்கள்?

எஸ். பி: தற்செயலாக ஒரு குழந்தையை ஒருவாகனம் அடித்துவிட்டால், அருகில் நின்றவர்கள் 'சாரதியைத் தாக்குவது இயற்கை, அதே போல ஒரு பொலிஸ்காரர் சுட்டுக்கொல்லப்பட்டால், சில வேளைகளில் அப்படி ஏதாவது நடந்திருக்கலாம்.

### ''கிறிமினலுக்கு எங்காவது சிலை எழுப்புவார்களா?''

தினபதி நிருபர்; உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தாக்கப்பட்டாரே?

எஸ் பி: எப்போது।

### ஏ. ஜி. ஏ. தாக்கப்பட்டது தெரியாது

நிருபர்: பொலிஸ் கான்ஸ்டபிள் சுடப்பட்டபின் பஸ்ஸில் சென்ற வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தம்பிமுத்துதாக்கப்பட்டார். அதுவும் தாம் யார் என அறிமுகம் செய்தபின்பும் தாக்கப்பட்டார்

எஸ். பி: அப்படியான சம்பவம் ஒன்றுநடந்ததாக இது வரை எனக்குத் தெரியதே

நிருபர் பத்திரிகையில் வந்துள்ளது (அருகில் இருந்த அரசாங்க அதிபரை தினபதி நிருபர் நோக்குகிறார். அதே சமயம், எஸ் பியும், அரசாங்க அதிபரைப் பார்த்துக் கொள்கிறார்.)

இன்ஸ்பெக்டர்: அப்படியானால் அவர் ஏன் புகார் செய்யவில்லை.

நிருபர்: இதுவரை புகார் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் புகார் செய்ய வந்தவர்களையே தாக்கியிருக்கிறீர்களே?

இன்ஸ்பெக்டர்: எங்கே?

நிருபர்: புலோலி ப. நோ. கூ சங்க பெட்ரோல் நிலையத்தில் கொள்ளை நடந்தபின் புகார் செய்யவந்த ஊழியர்கள் பலமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இன்ஸ்: அது பற்றி விசாரணை நடக்கிறது.

யாழ்ப்பாணத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் தலைமையில் 50 பொலிசார் ஊர்வலமாகச் சென்று, நாகவிகாரை அதிபருக்குப் புகார் செய்துள்ளனர் இப்படியான நிகழ்ச்சி இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தாதா?

எஸ் பி: அது யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது. விசாரணையில் அந்தப் பொலிஸ் வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

### தென்னிலங்கையில் கொள்ளை வேறுமாதிரி

நிருபர்: வடபகுதியில் ஒரு இயக்கம் செயல்படுகிறதா?

எஸ். பி: இங்கு நடக்கும் வங்கிக் கொள்ளைகளுக்கும் தென்னிலங்கையில் நடக்கும் வங்கிக் கொள்ளைகளுக்கும் வித்தியாசமுண்டு.

நிருபர்: என்ன வித்தியாசம்?

எஸ். பி இங்கு பொலிஸாரைச் சுட்டுக்கொன்றுவிட்டுக் கொள்ளையடிக்கிறார்கள். இனி நொச்சியிலும் பொலிஸார் மீது சுட்டுவிட்டுப் பணம் கொள்ளையடிக்கிறார்கள. இப்படித் தென்னிலங்கையில் எங்காவது நடந்ததுண்டா?

நிருபர்: இந்த இயக்கத்தினரை உங்களுக்குத் தெரியுமா?

எஸ் பி: தெரியும். ஆனால் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பது முடியாத காரியமாக இருக்கிறது.

நிருபர்: ஏன்?

### அரசியல்வாதிகள் ஆதரவு

எஸ் பி: அரசியல் வாதிகள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். சில வழக்குகளில், சந்தேகநபர்களுக்காக அரசியல் வாதிகளே வாதாடி அவர்களை விடுதலை செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சில இடங்களில் சட்டத்திலும் ஓட்டையிருக்கிறது இவ்வழக்குகளில் சிலர் சாட்சிசொல்லப் பயப்படுகிறார்கள, அதனால் குற்றவாளிகள் தப்பிவிடுகிறார்கள்.

நிருபர்: இப்படியான சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் எத்தனைபோ?

எஸ். பி: யாழ் மாவட்டத்தின் சனத்தொகை 7 லட்சத்துத் தொளாயிரம் சுமார் 100 பேர்தான் இந்தத் தீவிர இயக்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களை அடக்கிவிட்டால் 7 லட்சம் மக்களும் அமைதியாக வாழ்வார்கள. இதனையே மக்கள் விரும்புகிறார்கள்.

### புதிய சட்டம் வந்தால்....

நிருபர்; ஜனாதிபதி புதிய சட்டம் கொணடுவருவதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

எஸ். பி: சட்டம் கொண்டு வந்தாலும், மக்கள் ஒத்துழைப்பு இருந்தால்தான் குற்றவாளிகளுக்குத் தண்டனைபெற்றுக்கொடுக்கலாம். வடக்கில் நடந்த எந்த கொள்ளைச் சம்பவத்திலும், மக்கள் ஒத்துழைப்புதரவில்லை. பொலிஸார் காய்கறி வாங்கவும், சொந்த வேலைக்கும், எந்நேரமும் ஆயுதத்துடன் போகமுடியாது.

இருதினத்திற்குமுன் ஸ்கூட்டரில் பொலிஸார் தவறணைக்குச்சென்றிருக்கின்றனர் ஆயுதமின்றிச் சென்ற அவர்களில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். பொதுமக்களில் ஒருவர் கூட சாட்சிசொல்லமுன்வரவில்லை.

இன்ஸ்பெக்டர், பொலிசார் சுடப்பட்டால், உடனடியாக அப்பகுதியில் கடைகள் யாவற்றையும் மூடிவிடுவார்கள் எல்லாம் வெறிச்சோடிக்கிடக்கும். ஆனால் பஸ்ஸில் பிரயாணி ஒருவரைப் பொலிஸார் தாக்கிவிட்டால், அப்பகுதியிலுள்ள அத்தனைபேரும் பொலிஸாருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிவிடுவார்கள். ஏன் அதிகம் சொல்வான் பொலிஸார் சுடப்பட்டால், அத்தொகுதி எம். பி. கூட வந்துபார்க்கமாட்டார் மரணவீட்டிற்குக்கூட அவர் வருவது கிடையாது. சொந்தக்காரராக இருந்தாலும்கூட மக்கள் சடலத்தை எட்டிப்பார்க்கமாட்

(2-ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

### உரவிற்பனையில் கொள்ளை லாபம்

அம்பன் கமநலச்சேவை நிலையத்தில் உள்ள கமத் தொழில் விளைவுப் பெருக்கக்குழு பசளை, மருந்து விற்பனை நிலையத்தில் ஒரு அந்தர் வீ-1 ரக நெல் உரத்தின் விலை ரூபா 77/-. இதே ரக உரம் ஒரு அந்தர் தனியார் வர்த்தக நிலையங்களில் ரூபா 72/-க்கு வாங்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழு எனப் பெயர் பொறித்த ஒரு ஸ்தாபனம் ஒரு அந்தர் உரத்திற்கு இப்பகுதி விவசாயிகளிமிருந்து ரூபா 5/- கொள்ளை லாபமாகப் பெறுகின்றது

உரவிற்பனையைநம்பியுள்ள தனிப்பட்ட வியாபாரிகள் ஜீவகாருண்ய மனப்பான்மையுடன் நியாயமான விலையில் விற்பனையை மேற்கொள்ளும் போது கமத்தொழில் விளைவைப் பெருக்கவெனப் பெயர் சூட்டப்பட்ட ஸ்தாபனம் தனியார் வர்த்தகர்கள் விற்கும் விலைக்காகுதல் விற்றால் அது நியாயமானதே. அதைவிட்டு ஒரு அந்தருக்கு ரூபா 5/- மேலதிகமாகச் சுரண்டப்படுவதைத் தெரிந்த விவசாயிகள் தனியார் வர்த்தக நிலையங்களுக்குப் பல மைல் தூரம் பிரயாணம் செய்து பசளை வாங்கிவந்து விவசாயம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றனர். அவ்வாறு கஷ்டப்பட்டுச் சென்று வாங்கினுல்கூட ஆதாயம் உள்ளதாகவே இருக்கின்றது.

இதே நேரத்தில் நூற்றுக்கணக்கான அந்தர் பசளை கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழு விற்பனை நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றது அத்துடன் இந்த விளைவுப் பெருக்கக்குழு விற்பனை நிலையத்தில் உரம் சில்லறையில் விற்பனை செய்யப்படாமையால் அதுவும் இப்பகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையில் பெருத்த சிரமத்தை ஏற்படுத்துகின்றன எனவே இக்கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுவினால் விவசாயிகளுக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து இனியாவது இப்பகுதிவிவசாயிகளுக்குநீதியான முறையில் மேற்தரப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட நிலையத்தின் உயர் அதிகாரிகள் கவனம் எடுப்பார்களென எதிர்பார்க்கிறேன்

க. க. ஐயாத்துரை.
அம்பன்.

★ 30 ஆண்டு மேடைப்பேச்சு ★ போராட்ட சவால் ★ கறுப்புக் கொடிகள் ★ ஹ... ந...

# பாராளுமன்றப்படிகள் ஏறுவ...

# இவைகள் பயன்படும்

(தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறி அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்ட மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இதன் முதற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்தது.)

(நேற்றைய தொடர்ச்சி)

தேர்தல் நியமனக்குழுவினக்கும், மட்டக்களப்புத் தொகுதிக்கும் படுபாதகமான ஒரு முடிவைச் செய்தது. மட்டக்களப்புத் தொகுதியில் என்னையும், காசி ஆனந்தனையும் தேர்தலில் நிறுத்துவதாக முடிவு செய்தது. இது என்னை அரசியலிலிருந்து ஒழித்துக்கட்டுவதற்குச் செய்யப்பட்ட முதற்சதித் திட்டமென்பதை நியாயமும், நேர்மையும், நடுநிலைமையும் உள்ள மக்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுவிட்ட ஓர் உண்மையாகிவிட்டது.

## மன்றாடினேன்

ஒரே தொகுதியில் இருவரை நிறுத்த வேண்டாம் என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொண்டேன் அதற்காக ஒரு தக்க காரணத்தையும் எடுத்துக் கூறினேன்.

மட்டக்களப்புத் தொகுதி இரு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் தொகுதி. இத்தொகுதியில் வாழும் முஸ்லிம்மக்கள், தங்களுக்கென ஒரு முஸ்லிம் பிரதிநிதியையும், தமிழ்மக்கள் தங்களுக்கென்று ஒரு தமிழ்ப் பிரதிநிதியையும் தெரிவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்ட தொகுதி. இதில் இரு தமிழர்களை நிறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன். அப்படிச் செய்வது தந்தை செல்வா அதுகாலவரை கடைப்பிடித்து வந்த ஒரு மகத்தான அரசியல் கொள்கைக்கு முரணானது எனச் சுட்டிக் காட்டினேன். கிழக்குமாகாணத்தில் வாழும் தமிழ்மக்களும் தமிழ்மக்களின் மொழிவழிச்சகோதரர்களான முஸ்லிம் மக்களும் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்து, ஒருவரின் உரிமையை மற்றவர் மதித்து அரசியலை நடத்தவேண்டும். கிழக்கு மாகாணத்தில் வடக்கே தென்னைமரவாடி முதல் தெற்கே பொத்துவில்வரை வாழும் 3 லட்சத்துக்குமதிகமான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களின் சந்தேகத்தையும் மனக்கசப்பையும் உண்டாக்கி தமிழ்பேசும்மக்களின் அரசியல் உரிமையைப் பெறமுடியாது என்று எடுத்துக் கூறினேன்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யத்தக்க வகையில் சில தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன அத்தொகுதிகளில் பல்லாயிரக்கணக்கான தமிழ் வாக்காளர் இருக்கிறார்கள். மேற்படி தொகுதிகளில பல முஸ்லிம்கள் தேர்தலுக்கு நின்று முஸ்லிம் வாக்காளர்களின் வாக்குகளைப் பிரித்தெடுக்கும்போது ஒரு தமிழரைக்கட்சியின் வேட்பாளராக நிறுத்திவெல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தன.

இந்த நிலையை எடுத்துக்கூறி அத்தொகுதிகளில் போட்டியிட ஒரு சில தமிழர்கள் கட்சி நியமனத்தைக் கோரியபோது தந்தை செல்வா அப்படியான கோரிக்கைகளை நிராகரித்திருக்கிறார்.

## முஸ்லிம்களின் நம்பிக்கையை கூட்டணி இழந்தது

முஸ்லிம்கள் தங்களுக்கென்று ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும் தொகுதிகளில் எக்காரணம் கொண்டும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தந்தை செல்வா ஒரு தமிழ் அபேட்சகரை நிறுத்த முன்வந்ததில்லை. இந்த உண்மையை எடுத்துக்கூறி இரு தமிழர்களை நிறுத்தவேண்டாமென்றுகேட்டுக் கொண்டேன். ஆனால் அவர்கள் கேட்கவில்லை. இரு தமிழர்களை மட்டக்களப்புத் தொகுதியில் நிறுத்தியதன் மூலம் மட்டக்களப்புத் தொகுதியில மட்டுமல்ல, கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, முழு இலங்கையிலுமுள்ள முஸ்லிம்களின் நம்பிக்கையையும் கூட்டணி இழந்தது.

## குறுகிய நோக்கமுடைய கூட்டணித்தலைவர்கள்

நான் இப்படி முஸ்லிம்களின் உரிமைக்காகப் போராடிய போது, 'உனக்கேன் இந்தக் கவலை? முஸ்லிம்களை அதிகபேர் நாடாளுமன்றத்திற்குவந்தால், மட்டக்களப்புத் தமிழர்கள் நசுக்கப்பட்டுவிடுவார்கள் நீங்கள் இருவருமே வென்று வாருங்கள்' என்று பதில் கூறிய குறுகிய நோக்குடைய தலைவர்களும் கூட்டணியிலிருந்தார்கள்.

தேர்தல் நியமனக்குழுவின் இரட்டை நியமனத்தை நான் ஒரு தனிப்பட்ட சவாலாகவே ஏற்று தேர்தலில்போட்டியிட்டேன். தேர்தலின்போது காசி ஆனந்தன் ஏற்பாடு செய்த தேர்தல் மேடைகளில நான் படுமோசமாகத் தாக்கப்பட்டேன். ஆனால் நானோ எனது ஆதரவாளர்களோ கட்சியின் மற்றொரு வேட்பாளரான காசி ஆனந்தனை ஒருவார்த்தை கூட பண்பற்ற முறையில் பேசியதில்லை.

## இரு வேடம்தாங்கும் ஈழவேந்தன்

கட்சியைச்சேர்ந்த பொறுப்பு வாய்ந்த செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டக்களப்பு தேர்தல்மேடைகளில் என்பக்கமோ, காசி ஆனந்தன் பக்கமோ பேசாது விட்டிருப்பதுதான் நியாயம்; ஆனால் அப்படி அவர்கள்செய்யவில்லை. மத்தியவங்கியில் கனகேந்திரன் என்ற பெயரோடு அரசாங்கவேலை பார்த்துக்கொண்டு அரசியல் மேடைகளில் 'ஈழவேந்தன்' என்ற புனைப்பெயரோடு இருவேடந்தாங்கும் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவரும், கட்சியின் பத்திரிகை ஆசிரியரான கோவை மகேசன் என்பவரும் எனக்கெதிராக, காசி ஆனந்தனின் தேர்தல் மேடைகளிலே நிஎன்னைத்தரங்கெட்ட முறையில் தாக்கினார்கள். அவர்களுக்கெதிராக இன்றுவரை கட்சியின் மேலிடம் எந்த ஒரு விளக்கமும் கோரவில்லை. நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## உதய சூரியனை உதிக்காமல் செய்யுங்கள்

மட்டக்களப்புத்தொகுதிக்கு தென் திசையிலுள்ள பட்டிருப்புத் தொகுதியிலும், வடதிசையிலுள்ள கல்குடாத் தொகுதியிலும் "உதய சூரியன், உதிக்கவேண்டும். என்று பேசிய அதே பேச்சாளர்கள் மட்டக்களப்புத் தொகுதியில் 'உதய சூரியனை' அதாவது என் தேர்தல் சின்னத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தியோகபூர்வமான சின்னத்தை உதிக்காமல் செய்யுங்கள் என்று மக்களிடம் கோரினார்கள். அப்படிப் பேசியவர்களிடம் இதுவரை எவ்வித விளக்கமும் கேட்கப்படவில்லை.

ஈழவேந்தனின் விஷப் பேச்சும், கோவை மகேசனின் பண்புகெட்ட எழுத்துகளுமே என்னைக் கட்சியிலிருந்து துரத்துவதற்குப் போதுமானவையென்று என்னுடைய ஆதரவாளர்கள் பலர் அப்போதே பேசிக்கொண்டதை நான் அறிவேன்.

## காசியிடம் விளக்கம் கோரவில்லை

பொதுத்தேர்தல் முடிந்து இரண்டொரு தினங்களில் காசிஆனந்தன் வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில், தனக்கு வாக்களித்தவர்களுடைய வாக்குகள் மட்டுமே தூயவாக்குகள் என்று கூறி, என்னையும் எனக்கு வாக்களித்த வாக்காளர்களையும் கேவலப்படுத்தினார். இதற்கு அவரிடம் விளக்கம் கேட்கப்படவில்லை.

தேர்தலின் போதும், அதன் பின்பும் தொகுதியில் சிலராலும், கட்சியின் மேலிடத்தில் மற்றும் சிலராலும் புறக்கணிக்கப்பட்டு வந்த நான், நிலைமை மாறுமென்று ஒரு வருடகாலம் பொறுத்திருந்தேன். அதன் பின்பும் அவர்கள் மனம் மாறவில்லை. என்னை ஒழித்துக் கட்டுவதொன்றையே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வந்தார்கள் என்பதை நான் அறியக் கூடியதாக இருந்தது.

ஒரு சந்தர்ப்பத்தில் மட்டக்களப்புத் தொகுதியில் பட்டிருப்பு எம். பி. திரு பூ. கணேசலிங்கத்தின் வீட்டில் நடைபெற்ற ஒரு செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு நண்பர் திரு அமிர்தலிங்கமும், வேறு சிலரும் என்னை வந்து அழைத்தார்கள். அப்பொழுது நான் பெருந்தன்மையோடு எனக்கிழைக்கப்பட்ட அநீதிகள் - இலட்சியங்கள் - உபத்திரவங்கள் - உத்தரிப்புகள் - கழுத்தறுப்புகள் எல்லாவற்றையும் மறந்து, செயற்குழுவில் கலந்துகொள்ள அவர்களுடன் சென்றேன். அன்று எனக்கு திரு. கணேசலிங்கம் வீட்டில் நடந்த அவமானம் மறக்க முடியாதொன்றாகும்.

செயற்குழுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திட்டமிட்டு ஏற்கனவே அழைத்துக்கொண்டு வந்து கூட்டம் நடைபெற்ற வீட்டுக்கு முன்னுள்ள வீட்டிலும் அத்தெருவிலும் குவிக்கப்பட்டிருந்த அரசியல் எதிரிகளால் நானும், என்னோடு சேர்ந்தவர்களும் கேவலப்படுத்தப்பட்டோம். அன்று பிற்பகல் எனது தொகுதிக்குள்ளேயே நடத்தப்பட்ட ஊர்வலத்தில் நான் சேர்த்துக்கொள்ளாது ஒதுக்கப்பட்டேன். அன்று மாலை எனது தொகுதியில் பாட்டாளிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எனக்கு மட்டும் பேசச்சந்தர்ப்பம் மறுக்கப்பட்டது. என்னோடு போட்டியிட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட காசி ஆனந்தனுக்கே பேச சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதே கூட்டத்துக்கு கட்சித் தலைவர் திரு. சிவசிதம்பரம் தலைமை வகித்தார் என்பதும், அதே மேடையில் கட்சியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் வீற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

## தந்தை செல்வா திரும்பிச்சென்றார்

இந்தச் சந்தர்ப்பத்தில் தந்தை செல்வாவின் தலைமையின் சிறப்பையும், பெருந்தன்மையையும் நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். தந்தை செல்வா உயிரோடிருந்தபோது மட்டக்களப்புத் தொகுதியில் திரு. காசிஆனந்தன் ஒருபொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அக்கூட்டத்திற்கு என அச்சிடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரத்தில் வழக்கம் போல் என்னுடைய பெயர் இடம் பெற்றிருக்கவில்லை. அன்றைய தினம் மட்டக்களப்புக்கு காலை ரயிலில் வந்திருந்த தந்தை செல்வா, மட்டக்களப்புத் தொகுதியில் நடைபெறும் கூட்டத்தில் மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. இராசதுரையின் பெயர் சேர்க்கப்படவில்லையென்றால் தாமும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று காசிஆனந்தனிடம் முகம் சுண்டி அதிருப்தியோடு கூறிவிட்டு கூட்டத்தில்கலந்து கொள்ளாமலே மாலை ரயிலில் கொழும்புக்குத் திரும்பிச் சென்றார். இந்த இடத்தில் தலைவன் என்ற ஸ்தானத்தில் தந்தை செல்வாவின் மகத்துவத்தை எண்ணிப்பார்க்கின்றேன். சின்னத்தனத்தோடு நடக்கும் மற்றையோரின் சிறுமையையும் எண்ணிச் சலிக்கின்றேன்.

## முன்னரே வெளியேறுமாறு வற்புறுத்தினர்

இந்தப் பின்னணியையெல்லாம் அறிந்த எனது ஆதரவாளர்கள் 1978ம் ஆண்டு செப்டம்பர் 7ந் திகதி புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தில நிறைவேறவிருந்ததை அறிந்ததும், புதிய அரசியலமைப்பிலிருந்த ஒரு சரத்தைச் சுட்டிக்காட்டி நான் கூட்டணியில் தொடர்ந்து அங்கம் வகிப்பது ஆபத்து என்றும், அப்போதே நான் வெளியேறவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். அப்போது அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தச் சரத்து, ஓர் அரசியல் கட்சியின் செயலாளர் விரும்பினால், அக்கட்சியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினரை விலக்கிவிட்டு அந்த இடத்தில் தமக்குப்பிரியமான ஒருவரை நியமிக்கலாம் என்பதாகும்.

'இந்தச் சரத்தின்படி நீங்கள் பழிவாங்கப்படுவீர்கள். உடனடியாக கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்யுங்கள்' என்று எனது தொகுதியில் மட்டுமல்ல நாடு முழுவதிலுமிருந்த எனது அபிமானிகள் கேட்டுக்கொண்டார்கள். அப்படியிருந்தும், அதாவது-கட்சிக்கு உள்ளும்புறமும் எனக்கு இழைக்கப்பட்டுவந்த இடர்பாடுகளையும், இடுக்கண்களையும் பொறுத்துக்கொண்டேன் கட்சியிலிருந்து விலக என் மனம் இடம் தரவில்லை.

## எனது அரசியல் சாகஸம்

இந்தச் சமயத்தில் பிரதமர் பிரேமதாசா உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு மட்டக்களப்புக்கு வருகைதந்தார். மிகுந்த திறமைசாலியும், பேச்சுவல்லுநரும், அஞ்சாநெஞ்சினரும், சார்ந்தவர்களைக் கைதூக்கிவிடும் பண்பினரும், செயல் வீரருமான அவரைச் சந்தித்து மட்டக்களப்பின் பின்தங்கிய நிலையை அவருக்கு தனிப்பட்ட முறையிலல்ல, மட்டக்களப்பு வாக்காளப் பெருமக்கள் முன்னிலையிலேயே எடுத்துக்கூற வேண்டுமென்று நான் எண்ணினேன். அதற்குப் பொருத்தமுடைய ஒரு சந்தர்ப்பமாக அவருடைய வரவேற்பு மேடையை நான் பயன்படுத்தினேன் இதுநான்கையாண்ட ஒரு அரசியல் சாகஸமாகும்.

அரசாங்க அதிகாரிகள் முன்னே நாட்டின் குறையை எடுத்துச் சொன்னால் அது காரியாலய 'பைல்' கட்டுகளோடு நின்றுவிடும். மக்கள் முன்னிலையில் எடுத்துச்சொன்னால், மக்கள் முன்னிலையிலேயே பிரதமர் பதிலளிக்கக் கூடும். அப்போது அந்தப் பேச்சு ஒரு வாக்குறுதியாக நீர்மேல் எழுத்துப்போலல்லாமல், சிலைமேல் எழுத்துப் போல் அமையும் என நான் எண்ணினேன்.

## ஏன் இந்த அநியாய...

## ஏன் இந்த நிஷ்டூரம்?

## ஏன் இந்த சித்திரவதை?

கேட்ட கேள்விக்குப் ப... கொடுக்க நான் முப்பது நா... அவகாசம் கேட்டேன். ... வருஷம் கட்சி வளர்த்த... னுக்கு, 30 நாளென்ன, 3... நாள்தான் கொடுத்த... என்ன குறைந்து விடுக? ... றும் எதிர்பாராதபடி இ... யில் ஏற்பட்ட பெரும் ... வளியின் அனர்த்தங்களை ... ணிட்டாவது நான் கேட... அவகாசத்தைக் கொடுத்தி... கலாமல்லவா? அப்படிச் ... யாமல் கட்சியில் நான் ... த்த பதவியையும், செ... குழு உறுப்பினர் அங்க... வப் பதவியையும் பறிமு... செய்ததோடு, எனக்குக் கல்... கொடுத்துவிட்டதாகப் பத்... கைகளில் செய்தி வெளிவ... படியும் செய்தார்கள். ... னுடைய அரசியல் ஆளு... மையையே இதன்மூலம் த... பொடியாக்க முயன்றார்க... ஏன் இந்த அநியாயம்? ... இந்த நிஷ்டூரம்? ஏன் இந்... சித்திரவதை? ஏன் இந்... சிலுவை ஏற்றம்? எனக் ... றிக் குமுறிக் கேட்டது ... மனம். அதற்குக் கிடை... தவிர்க்கமுடியாத பதிலதா... நான் இம்மாதம் 9ம் தி... சமர்ப்பித்த ராஜினாமா.

## 30 வருஷம் கட்சிவளர்...

## 300 நாள் அவகாசம் கொடு...

### பிரதமர் வாக்குறுதி

மட்டக்களப்பின் பரிதாப நிலையை நான் எடுத்துக்கூறக் கேட்ட பிரதமர் மட்டக்களப்பின் முன்னேற்றத்துக்காகத் தாம், தக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதாக வாக்குறுதியளித்தார். மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இப்படி நான் செய்தது, கூட்டணியின் மேலிடத்துக்குப் பிடிக்கவில்லை. ஏன் இப்படிச் செய்தாய்? என்று விளக்கம் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்கள் இப்படியான குற்றத்தை இழைக்காதவர்களாக இருந்திருந்தால் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். அவர்கள் கேள்விகளுக்கு கட்டுப்பாட்டோடு பதிலளித்திருப்பேன்.

### யாசகம் கேட்காத தியாக சீலர்களா?

என்னிடம் விளக்கம் கேட்டவர்கள் மந்திரிகளின் வரவேற்புக்களில் கலந்து கொள்ளாதவர்களா? மந்திரிகள் அளித்த ஹோட்டல் பார்ட்டிகளில் கலந்து உண்டும் குடித்தும் உறவாடியும் களிக்காதவர்களா? மந்திரிமார்களின் படிகளில் ஏறி உத்தியோகமும், கோட்டாவும், மாறுதல்களும், 'கோப்பரேஷன்' நியமனங்களும், அரசாங்க போர்டுகளின் பதவிகளும் யாசகமாகக் கேட்காத தியாக சீலர்களா?

என்னுடைய தாய்த்... நாடான மட்டக்களப்பு ... றும் வரலாறு காணாத பே... வுக்கு இலக்காகியுவளது.

1978 நவம்பர் 23ல் வீ... பயங்கரச் சூறுவளி மட்... களப்பை ஒரு யுத்தகளமா... புரட்டிவிட்டது. கல்கும் ... மலையினுள் ஏற்பட்ட ஒரு பூ... பத்தில் விளைபாடுகளு... இலக்காகவிட்டது. எ... மீன்பாடும் தேன்நாடு. ... அடிகளுக்குமேல் எழுந்த க... கொந்தளிப்பு பல கிராம... ளையே பெயர்த்தெறிந்து வ... டது. சுமார் 56 ஆயிரம் ... கள் தரைமட்டமாகிவிட்ட... நூற்றுக்கணக்கானோரின் உ... கள் பறிக்கப்பட்டுள்ளன. ... லாயிரக்கணக்கான ஏக்... நெல் வயல்கள் பாழ்விழு... போயின. 14 லட்சம் தென்... களும் நூற்றுக்கணக்கா... பாடசாலைகளும் மாவட்ட... முழுவதிலுமிருந்த கோயி... ளும, தேவாலயங்களும், ப... திகளும், உள்ளூராட்சி ம... கட்டடங்களும். ... சேமிக்கும் குதங்க... வர்த்தக நிலையங்களும், ... மாளிகைகளும், மீனவர்கள... தோணிகள், வலைகள் எ... வும் கைத்தறி நெசவுநிலை... களும் அழிவுற்றன. ... காலத்து அதீத அழிவ... அமைந்தது இந்த அழிவு. ... தப் பேரழிவிலிருந்து எ... நாட்டை காப்பாற்றும் க... பாடு எனக்குண்டு. அ... நான் செய்தே தீரவேண்டு...

33 ஆண்டுகளாக நட... வந்த மேடைப்பேச்சுக்க...

★ ஹர்த்தால் நடவடிக்கை

# ...வவதற்கே ...தும்

...ந்த அநியாயம்?
...ந்த நிஷ்டூரம்?
...ந்த
...பதை?

...கேள்விக்குப் பதில் ...நான் முப்பது நான் ...கேட்டேன். 30 ...கட்சி வளர்த்தவ ...நாளென்ன, 300 ...கொடுத்தால் ...றைந்து விடுக? சற் ...பாராதபடி இடை ...ட்ட பெரும் சூரு ...அனர்த்தங்களை முன் ...து நான் கேட்ட ...தைக் கொடுத்திருக் ...வா? அப்படிச் செய் ...ட்சியில் நான் வகி ...வியையும், செயற் ...ழுப்பினர் அங்கத்து ...வியையும் பறிமுதல் ...டு, எனக்குக் கல்தா ...விட்டதாகப் பத்திரி ...செய்தி வெளிவரும் ...செய்தார்கள். என் ...அரசியல் ஆளுமை ...இதன்மூலம் தவிடு ...க்க முயன்ஞர்கள். ...அநியாயம்? ஏன் ...ஷ்டூரம்? ஏன் இந்தச் ...தை? ஏன் இந்தச் ...ரற்றம்? எனக் குமு ...இல் கேட்டது என் ...அதற்கு இடைத்த ...டியாத பதில்தான் ...மாதம் 9ம் திகதி ...த ராஜினுமா.

போராட்டச் சவால்களும், கறுப்புக்கொடிகளும், ஹர்த்தால்களும் அடுத்த பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டிப் பாராளுமன்றப் படிகளில் ஏறுவதற்கே பயன்படலாம். ஆனல் இவைகளெல்லாம் அழிவற்ற என் தாய்த் திருநாட்டை புனர் நிர்மானம் செய்யவோ வாழ்விழந்த மட்டக்களப்பு மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவோ உடனடியாகப் பயன்தர மாட்டா. அரசாங்கத்தின் உதவியிருந்தால்தான், உதவியும் ஒத்தாசையும் நல்லெண்ணமும் அது வாரிவழங்கக்கூடிய பெருநிதியும் இருந்தால் தான், மட்டக்களப்பை மீண்டும் ஒரு 15 வருட காலத்திலாவது பொலிவுற்ற பிரதேசமாக்க முடியும்.

## சிறகொடிந்த பறவைபோல் ஆக்கினர்கள்

சூருவளிக் கஷ்ட நிவாரணப் பணிகளுக்காக தொகுதியெங்கும் ஓய்வு ஒழிச்சலின்றிப் பறந்து திரிந்த என்னைச் சிறகொடிந்த பறவைபோல ஆக்கினர்கள்.

பிரதமரை வரவேற்று, பொதுமக்கள் முன்னிலையில் குறைபாடுகளை எடுத்துக்கூறி என் தாய்திருநாட்டின் அபிவிருத்திக்கு உதவிகேட்டால் அது குற்றம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கல்குடாத்தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு மறுசீரமைப்புக்குழுத் தலைவராக இருக்கிருர்.

## ...ட்சிவளர்த்தவனுக்கு ...ம் கொடுத்தால் என்ன?

...டைய தாய்த்திரு ...மட்டக்களப்பு என் ...று காணுத பேரழி ...க்காகியுள்ளது. ...ம்பர் 23ல் வீசிய ...சூருவளி மட்டக் ...ஒரு யுத்தகளமாகப் ...டது. கக்கும் எரி ...ஏற்பட்ட ஒரு பூகம் ...பா டுகளுக்கு ...விட்டது. எனது ...தேன்நாடு. 15 ...மேல் எழுந்த கடல் ...ப்பு பல கிராமங்க ...யர்த்தெறிந்து விட் ...ர் 56 ஆயிரம் விடு ...மட்டமாகிவிட்டன ...க்காஞேரின் உயிர் ...ப்பட்டுள்ளன. பல் ...ணக்கான ஏக்கர் ...ல்கள் பாழ் விழுந்து ...14 லட்சம் தென்னை ...நூற்றுக்கணக்கான ...களும் மாவட்டம் ...மிருந்த கோயில்க ...வாலயங்களும், மகு ...உள்ளூராட்சி மன்ற ...ங்களும். நெல் ...குதங்களும் ...லயங்களும், பட ...ளும், மீனவர்களின் ..., வலைகள் என்பன ...ந்தறி நெசவுநிலையங் ...ழிவுற்றன. ஊழி ...நேர்த்த அழிவாக ...அந்த அழிவு. இந் ...ழிவிலிருந்து எனது ...காப்பாற்றும் கடப் ...னக்குண்டு. அதை ...ப்பதே திரவேண்டும் ...டுகளாக நடத்தி ...டைப்பேச்சுக்களும்,

அவரை வரவேற்று உதவி பெற்று அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்தலாம் என்ருல் அது குற்றம்.

கட்சிக் கொள்கைக்கு அது மாறு என்று கூறி என்னிடம் விளக்கம் கேட்கிருர்கள்.

இந்த நிலைமை தொடருமானல் மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்திசெய்ய முடியுமா?

## எத்தனைகுழிகளை ஆழமாகப் பறித்தாலும்

தனிப்பட்டமுறையில் கட்சி எனக்கு என்ன துரோகத்தைச் செய்தாலும், இன்றைய தலைமை எனக்கு எத்தனை குழிகளை எவ்வளவு ஆழமாகப் பறித்தாலும், எப்படி, எப்படி எல்லாம் என்னை இம்சைப் படுத்தினுலும் என்னுடைய அருமைத் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் பெயரால் நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வேன். இதுவரை காலமும் பொறுத்து வந்த எனக்கு இனியும் பொறுப்பது ஒன்றும் கஷ்டமல்ல.

ஆனல்......

மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதையே மறைமுகமாகத்தடுத்து நிறுத்தும் முயற்சியில் கட்சி எனக்குக் காலைக்கட்டுப் போடுகிறது என்ருல் நான் தொடர்ந்து கட்சியில் இருக்கமுடியுமா?

என்னுடைய தொகுதி மக்களுக்கு நான் துரோகம் செய்ய முடியுமா? கடந்த முப்பது வருடங்களாக என்னுடைய சொல்லைக் கேட்டு எந்தக் கட்சியை என்னுடைய தொகுதி மக்கள் உளமார நேசித்து ஆதரித்து வந்தார்களோ அந்தக் கட்சியே என்தொகுதி மக்களின் நல்வாழ்வுக்குக் குறுக்கே நிற்கும்போது நான் கட்சியோடு நிற்பதா அன்றி அதை விட்டு மக்கள் பக்கம் சார்வதா? சிந்தித்தேன், முடிவு செய்துவிட்டேன். கட்சியிலிருந்து விலகிக்கொள்வது என்ற என்னுடைய முடிவை என் தொகுதி மக்கள் சரியான முடிவு என்று மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள்.

# குறுகிய நோக்குடைய தலைவர்களும் கூட்டணியில் இருந்தனர்

## தமிழ் உரிமை காக்கப்படவேண்டும்

தமிழ் உரிமை காக்கப்பட வேண்டும். தமிழ் பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும். தமிழ் மக்களின் தனித்துவம் பேணப்படவேண்டும் என்ற கோட்பாடுகளிலிருந்து நான் என்றும் விலகியவனல்லன். இன்றும் விலகியவனல்லன். இவற்றை அடைவதற்கு முதலில் நிலமும் செழிக்கவேண்டும். மக்களும் வாழவேண்டும்.

மட்டக்களப்பு நிலமும் அழிந்துகிடக்கிறது. மக்களும் வாழ்வழிந்து கிடக்கிருர்கள். ஆகவே என் முதற்பணி எது என்பதை நான் நிர்ணயித்து விட்டேன். நிலையை அறிந்து, தேவையை அறிந்து, காலத்தையும்கோலத்தையும் அறிந்து தன்பலத்தையும் மாற்றுன் பலத்தையும் எடைபோட்டு அடியெடுத்து வைப்பதுதான் அரசியல் தீர்க்கதரிசனமும் சாணக்கியமுமாகும்.

தந்தை செல்வா தீர்க்கதரிசனமும், சாணக்கியமும் வாய்த்த பெருந்தலைவர் போராட வேண்டிய நேரத்தில் அவர் போராடினுர். பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய நேரத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தினுர். தமது கொள்கைக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் வேற்றுமையில் ஒற்றுமை காண விழைந்தார். சில சந்தர்ப்பங்களில விட்டுக்கொடுத்தும், சில சந்தர்ப்பங்களில் இறுக்கமாக நின்றும் தமிழ் பேசும் மக்களின் உரிமையைக் காப்பாற்றினுர்.

1956 பொதுத் தேர்தலில் சமஷ்டிக் கோரிக்கையை மக்கள் முன்வைத்து வெற்றி பெற்றுவந்து, காலிமுக சத்தியாக்கிரகம், ஸ்ரீ போராட்டம் போன்றவற்றை நடத்திய போதிலும், பின்னர் பிரதமர் பண்டாரநாயக்காவோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தமும் செய்துகொண்டார்.

1965ல் மீண்டும் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து தேர்தலில் வெற்றிபெற்ற பின்பும், பிரதமர் டட்லி சேனநாயக்காவோடு பேச்சுவார்த்தை நடத்தவும் ஒப்பந்தம் செய்யவும் அவர் பின் நிற்கவில்லை.

## டட்லி ராஜினுமாச் செய்யமுயன்றபோது

அது மட்டுமல்ல, அவருடைய அரசாங்கத்திலேயே சேர்ந்து பணியாற்ற அமரர் திருச்செல்வத்தையும் கொடுத்துதவினுர். ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்ட மாவட்டசபைகளை அமைப்பதில் பிரதமர் டட்லிக்கு நெருக்கடி ஏற்பட்டது. தாம் பிரதமர் பதவியிலிருந்தே ராஜினுமாச்செய்கிறேன்என்று பிரதமர் டட்லி பகிரங்கமாகவே கூறினுர். அப்போது தந்தை செல்வா பழிதீர்க்க முனையவில்லை. நாட்டிலிருந்த நிலையையுணர்ந்து, "நீங்கள் ராஜினுமாச் செய்ய வேண்டாம், உங்கள் ராஜினுமா பிரச்சினையைத் தீர்க்காது. தொடர்ந்தும் பிரதமராயிருங்கள்" என்று ஆலோசனை கூறினுர்.

1970 பொதுத்தேர்தலில் மீண்டும் சமஷ்டிக்கோரிக்கையை முன் வைத்து தேர்தலில் போட்டியிட்டு வென்று வந்தபின் 1972இல் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது. அப்போதும் பேச்சுவார்த்தையையே விரும்பி 6 அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்தவர் தந்தை செல்வா.

## ஜே. ஆரை வாழ்த்திய செல்வா

தந்தை செல்வா காலமாவதற்குச் சில மாதங்களுக்குமுன் இன்றைய ஜனுதிபதியாக விளங்கும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஒரு கடிதம் எழுதினுர். அன்று திரு ஜே ஆர் ஜெயவர்த்தன எதிர்க்கட்சித்தலைவராக இருந்தார். அவருக்கு எழுதிய அந்தக் கடிதத்தில், திரு ஜெயவர்த்தன ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் ஒருதலைவர் என்றும், அஞ்சாநெஞ்சமும் சலிப்பற்ற உழைப்பும் உடையவர் என்றும் குறிப்பிட்டிருந்தார். சுபீட்சமான ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் இசுரசாதனையில் திரு ஜெயவர்த்தன நிச்சயம் வெற்றிகாண்பார் என்றும், அடுத்துவரும் அரசாங்கத்தின் மாபெரும் தலைவராக அவரே விளங்குவாரென்றும் வாழ்த்தியிருந்தார். தந்தை செல்வாவின் வாழ்த்து பலித்தது வரலாருகாணுத பெரும் பான்மையோடு வெற்றியீட்டினுர் திரு ஜெயவர்த்தன.

பாராளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை, சென்ற அரசாங்கம் இரண்டு வருடம் நீடித்த போது அதைஎதிர்த்துத்தமது பாராளுமன்றப் பதவியை ராஜினுமாச்செய்து கொழும்பு தெற்கில் உபதேர்தலுக்கு நின்ருர் திரு ஜெயவர்த்தன. அப்போது தந்தை செல்வா அவரது பத்திரிகையான 'சுதந்திரன்' வார இதழில் திரு ஜெயவர்த்தனவை ஆதரித்து தலையங்கம் தீட்டச்செய்தார். கொழும்பு தெற்கு வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்ருகத் திரண்டு திரு ஜெயவர்த்தனவின் அமோக வெற்றிக்காக வாக்களித்து இந்த நாட்டில் ஜனநாயகத்தையும், பாராளுமன்ற ஆட்சிமுறைமையையும் பாதுகாக்க வேண்டுமென்று புத்தி கூறினுர்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றனவென்ருல், திரு ஜெயவர்த்தன மீது தந்தை செல்வா எத்தகைய பெருமதிப்பையும், நம்பிக்கையையும் வைத்திருந்தார் என்பதையேயாகும்.

## 'அமிர்' அன்று கூறியது

திரு. ஜெயவர்த்தன மீது தந்தை செல்வா வைத்திருந்த பெருமதிப்பையும், நேசத்தையும் என்னைப்போலவே என் நண்பர் திரு. அமிர்தலிங்கமும் உளமார அறிந்திருந்தார். அதனுல்தான் திரு. அமிர்தலிங்கம், திரு. ஜெயவர்த்தன இலங்கைக் குடியரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனுதிபதியாக பதவியேற்ற போது பாராளுமன்றத்திலேயே பகிரங்கமாகப் பாராட்டிப் பேசினுர். அவர் கூறியதாவது:-

"வாய்ப்பேச்சில் ஒழுக்க நெறிக்கும் தர்ம சீலத்துக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டாலும் ஊழலும் ஒழுக்கக்குறைவும் பல வழிகளிலும் மலிந்திருக்கின்ற இந்த நாட்டிலே தமது தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் ஒழுக்கத்தையும் தர்மநெறியையும் தவருமற் கடைப்பிடித்து வருகிற ஒரு தலைவராக திரு ஜெயவர்த்தன விளக்கி வருகிருர். அதேபோலவே ஒழுக்க நெறியிலும் சத்திய வழியிலும் நம்பிக்கை கொண்ட ஒருதலைவராக விளங்கிய, மறைந்த எனது தலைவரான திரு.செல்வநாயகம் அவர்களால் வழி நடத்தப்பட்ட ஒருவன் என்ற வகையிலே இந்தக் குணுதிசயங்களைப் பெற்றிருக்கிற ஒரு பெரும் தலைவரான திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்களுக்கு நான் தனிப்பட்ட மதிப்பை அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்" இவ்வாறு கூறினுர் திரு. அமிர்தலிங்கம்.

## மற்றுமொரு பெருந்தலைவர்

தந்தை செல்வாவின் பின். கடந்த பொதுத் தேர்தல் காலம்வரை தமிழர் விடுதலைக் கூட்டணியை வழிநடத்திய தனிப்பெருந் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களாவர். இலங்கை அரசியலில் இன்னுமொரு பெருந்தலைவர் திரு. தொண்டமான். 40 ஆண்டுகளுக்கு மேலாக தொழிலாளியினதும் தமிழ்ப் பேசும் மக்களினதும் நலனுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் உழைத்த செயல் வீரர் அவர். போராட்டங்கள் பலவற்றைக் கண்டவர். காங்கேசன்துறை இடைத்தேர்தலில் என்னைப் போலவே தந்தை செல்வாவின் ஈடிணையற்ற வெற்றிக்குத் தொகுதியில் பல நாட்கள் தங்கியிருந்து உழைத்தவர் அவருக்கும் தந்தை செல்வாவின் உள்ளம் நன்கு தெரியும். தந்தை செல்வா, தலைவர் ஜெயவர்த்தனவைப்பற்றி எப்படி மதிப்பீடு செய்திருந்தார் என்பதையும திரு. தொண்டமான் அறிந்திருந்தார். அதனுல் தான் அவரும் திரு. ஜெயவர்த்தன அவர்களையும் அவரின் நல்லாட்சியையும் எப்போதும் பாராட்டுபவராக விளங்கினுர் அதுமட்டுமல்ல, இன்று அதிஉத்தம ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தில் ஓர் அங்கமாக இருந்து பணியாற்றவும் அவர் முன்வந்திருக்கிருர். திரு ஜெயவர்த்தனவைத் தந்தை செல்வா அந்தரங்கமாக நேசித்திருக்காவிட்டால் இந்தக் காரியத்தைச்செய்ய திரு தொண்டமான் துணிந்திருப்பாரா

தமிழ்மொழி உரிமைக்காக தமிழ்ப்பிரதேசப் பாதுகாப்பிற்காக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பொதுமேடையிலேறி தந்தை செல்வாவின் காலடியிலே குருவின் பாதாரவிந்தத்தைப் பணிந்து நிற்கும்ஒருசிஷ்யனைப் போன்று எமது நீதியமைச்சர் திரு கே டபிளயு தேவநாயகம் ஒருகால் வீற்றிருந்த காட்சி என் மனக்கண்முன் தோன்றுகிறது. திரு தேவநாயகமவர்களும் தந்தை செல்வாவின் மீதும் அவரது சாத்விகத்தன்மையின் மீதும் காந்தியக் கொள்கை மீதும் அளவற்ற பற்றுக்கொண்டவராவர். தந்தை செல்வாவும் திரு தேவநாயகத்தை ஒரு கண்ணியம் மிக்க கனவாரென்றே மதித்திருந்தார். பல தடவைகளில் இத்தக்கருத்தை அவர் என்னிடமே தெரிவித்திருந்தார். அத்தகைய கண்ணியம் மிக்க கனவானன திரு.தேவநாயகம் இன்று திரு ஜே ஆர் ஜெயவார்த்தனவின் கரத்தைப் பலப்படுத்தி நிற்கின்ருர்.

## நேசக்கரம் நீட்டும் ஜே. ஆர்.

இந்தச் சூழ்நிலையில்தான் தார்மீகஅரசாங்கத்தின் ஜனுதிபதியான திரு ஜே ஆர் ஜெயவார்த்தன தமிழ் மக்களிடம் தமதுநேசக்கரத்தை நீட்டுகின்ருர். அந்த நேசக்கரத்தை தமிழ்மக்களின் சார்பில் உறுதியோடும் நம்பிக்கையோடும், நேசத்தோடும், நேர்மையோடும், ஆர்வத்தோடும் அன்போடும் ஏற்று இந்த நாட்டின் பிரச்னைகளை, வெறுப்பும், விரோதமுமின்றி கசப்புக் கரிப்புமின்றித் தீர்ப்பதற்குஒரு சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டியது நமது கடமையாகும். அப்படி அளிக்கப்படும் சந்தர்ப்பத்தை இறைமைசாலியான அவர் சீராகப்பயன்படுத்துவாரென்று நம்பலாம் நம்பிக்கை பயனற்றுப்போகுமாஞல் நாம் விட்ட இடத்திலிருந்து வேறு திசையை நோக்கலாம். ஆனல் எல்லாம் வல்ல இறைவன் நமக்கு நல்ல வழியையே காட்டுவான்.

கடந்த பொதுத் தேர்தலின் பின் நான் இந்த பாராளுமன்றத்தில் வாய்திறந்து பேசவில்லை. பேசவேண்டிய மனுநிலை எனக்கிருந்ததில்லை. ஆனல் இன்று இவ்வளவு நேரமும் பேசிவிட்டேன். பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த சபாநாயகர்அவர்களுக்கும்என் பேச்சை அன்புடனும், செவிமடுத்த சக உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்தநன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். (ம)

# பாராளுமன்றத்தின் புதிய நிரந்தர விதிகள்

[கொழும்பு]

பாராளுமன்றம் இனிமேல் பிற்பகல் 3 மணிக்கே கூடும்.

பாராளுமன்றத்தின் புதிய நிரந்தர விதிகள் கடந்த வெள்ளிக்கிழமை சபையில் குழு நிலையில் பரிசீலிக்கப்பட்டபோது, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம், சிவசிதம்பரம் கொண்டு வந்த திருத்தப் பிரேரணையை சபை ஏற்றுக் கொண்டதை யடுத்தே செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் பாராளுமன்றம் பி. ப. 2 மணிக்குப் பதிலாக இனிமேல் பி ப. 3 மணிக்கு கூடும். இரவு 7 மணிவரை சபை நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும் ஒரு மணி நேரத்துக்கு ஒத்திவைப்பு பிரேரணைகள் மீதான விவாதம் இடம் பெறலாம்.

வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணியிலிருந்து மாலை 5-30 மணிவரை சபைகூடும்

செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் தேநீர் இடைவேளைக்காக மாலை 4-30 மணியிலிருந்து 5 மணிவரை சபைஒத்திவைக்கப்படும்.

## திருத்தம் நிராகரிப்பு

பாராளுமன்ற அதிகார அறிக்கையில் [ஹன்சாட்] சிங்களத்தில் பேசும் பேச்சுக்களின் தமிழ் மொழி பெயர்ப்பும் தமிழ்ப் பேச்சுக்களின் சிங்கள மொழிபெயர்ப்பும் இடம் பெறவேண்டும் என்ற திரு. சிவசிதம்பரத்தின் மற்ருெரு திருத்தப்பிரேரணை நீண்ட நேர விவாதத்தின் பின்னர் நிராகரிக்கப்பட்டது.

அப்புத்தளை எம். பி. திரு. லொக்குபண்டார, உத்தியோக மொழியிலான சிங்களத்தில் மாத்திரமே அதிகார அறிக்கை

[8ம் பக்கம் பார்க்க]

பூட்டோவின் மரணதண்டனையை

# ஒத்திவைக்கக்கோரும் மனுமீதான விசாரணை

# காலவரையறையின்றி ஒத்திவைப்பு

கராச்சி, மார்ச். 26

பாகிஸ்தான்முன்னாள் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலி பூட்டோவின் மரண தண்டனையை ஒத்திவைக்கக் கோரும் மனு மீதான விசாரணையை பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் கால வரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு மீது ஆஜரான வழக்கறிஞரின் கோரிக்கையை அடுத்தே உயர்நீதிமன்றம் விசாரணையை காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.

ஆர்ப்பாட்டம்

இதேவேளையில் ஜனுப் பூட்டோவுக்கு ஆதரவு தெரிவித்து ராவல்பிண்டியிலும், ஹைதராபாத்திலும் நேற்று பலத்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

இலங்கைத் தமிழர் பிரச்னையில்

## தேசாய் தலையிட்டால் காங்கிரஸின் அபிப்பிராயத்தையும் கேட்கவேண்டும்

செயற்குழு தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கேட்டுக்கொண்டபடி இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்னைகளில் தலையிடும் பட்சத்தில் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்பதை முன்கூட்டியே தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கு அறிவித்து கட்சியின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையும் கோருவதென்று தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்துள்ளது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. தா. சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதவாச்சியின் மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவையும் வவனியாவுடன் சேர்ப்பதால் தமிழ்ப்பிரதேசம் பறிபோகும் ஆபத்து ஏற்படுகிறது என்று கருதப்படுவதால் அத்திட்டத்தை உடனடியாக கைவிடவேண்டும் என்று அரசைக் கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை வேட்பாளர்....

காங்கிரஸ் கட்சி சார்பில் யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள 67 பேரின் விண்ணப்பங்களும் இக்கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது. (இ)

## அத்தியார் உயர் மாணவர் விருந்து

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த விருந்துபசாரம் நாளை நடைபெறவுள்ளது. கல்வி அதிகாரி திரு. அ. செ. நல்லையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ஓ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி கிழக்கு ''வேல் முருகன்'' ஆலய புனருத்தாரண வேலைகள் பூர்த்தி யடைந்து இம்மாதம் 30 திகதி வெள்ளிக் கிழமை காலை மகா கும்பாபிஷேகம் நடைபெறும் ஜெகதீஸ்வரக்குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்துவார்.

நல்லைக்கந்தன் ஆலயத்துக்கு வருடாவருடம் இம்முருகன் ஆலயத்திலிருந்தே கொடிச்சீலை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ)

## தவக்கால நற்சிந்தனை

''நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதீர்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

(மத்தேயு 7 : 12)

நாம் மற்றவர்களுக்கு எதைச்செய்கிறோமோ அதுவே நமக்கு மீண்டும் அளிக்கப்படும். கடலையை விதைத்துவிட்டுக் கரும்பை எதிர்பார்க்க முடியுமா? நம்மை நாமே திருத்திக் கொண்டாலல்லாது மற்றவர்களை எந்த விதத்திலும் கட்டுப்படுத்த உருமை இல்லை.

மற்றவர்களுடைய குற்றங்களை யாருமே காண்பார்கள். தன்னுடைய குற்றம் குறைகளை ஒருவன் கண்டுகொள்வது அரிது. அதற்குவேண்டிய ஞானம் எளிதில் கிடைக்காது. அதைப் பெற அவன் அருள் வேண்டாமா?

—ஞானஒளி!

தொகுப்பு: வில்பிறெட்

## பாப்பரசர் பிரார்த்தனை

வத்திக்கான், மார்ச். 26

அமெரிக்காவில் இன்றுகைச்சாத்திடப்படும் ஒப்பந்தம் எகிப்து-இஸ்ரேல் மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டுமெனத் தாம் பிரார்த்திப்பதாக பரிசுத்த பாப்பரசர் அருளப்ப சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில் அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றியேயே மேற்கண்டவாறுகூறினர். (இ)

## ஜெயப்பிரகாஷர் நன்றாகத் தூங்கினார்

பம்பாய், மார்ச். 26

சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷரின் உடல்நிலை சற்றுத் தேறி வருவதாகவும் கடந்த இரவு அவர் நிம்மதியாகத் தூங்கினாரென்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். (இ)

## எண்ணெய் விலை அதிகரிக்கும்?

லண்டன், மார்ச். 26

எண்ணெயின் விலையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று எண்ணை உற்பத்திஏற்று மதிநாடுகள் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (இ)

## உகண்டாவில் வெளிநாட்டு விமானம் பறக்கத்தடை!

கம்பாலா, மார்ச். 26

உகண்டாவில் வெளிநாட்டு விமானங்கள் பறக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

உகண்டா பிராந்தியத்திற்குள் அத்துமீறிப்பிரவேசிக்கும் வெளிநாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்துமாறு பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கம்பாலாவிலுள்ள சர்வதேச விமானநிலையம் மூடப்பட்டுள்ளதென்றும் இரவு ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளதென்றும் கம்பாலா வானொலி அறிவித்தது. (இ)

## வியட்நாம் எல்லையில் மீண்டும் சீன தாக்குதல்

நியூயோர்க், மார்ச். 26

சீன-வியட்நாம் எல்லையில் சீனப்படைகள் புதிய தாக்குதல்களை நடத்தியுள்ளனஎன்று வியட்நாமின் ஐ. நா. பிரதிநிதி ஐ. நா.விடம் புகார்செய்துள்ளார்.

வியட்நாமுக்குள் சீனப்படைகள் 30 இடங்களில் நிலை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

இந்திரா ஆட்சியாளர்களை

## வஞ்சம்தீர்க்கஜனதா அரசு கங்கணம் கட்டியுள்ளது

காங்கிரஸ் கண்டனம்

புதுடில்லி, மார்ச். 26


அண்மையில் இந்திய ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட நீதிமன்றங்கள் சட்டத்திற்கு காங்கிரஸ் காரியக்கமிட்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்றைய காங்கிரஸ்கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் இக்கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனதா கட்சியும் அரசும் கடந்த ஆட்சியாளர் மீது வஞ்சம் தீர்க்க கங்கணங்கட்டியுள்ளதுஎன்று மேற்படிகண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ)

Jem

ஜெம்



10,000 க்கு மேற்பட்ட
"ஜெம்" மின்சார மோட்டர்கள்
தற்பொழுது இலங்கையில்
பாவிக்கப்படுகின்றன.

10,000க்கு மேற்பட்ட "ஜெம்" மின்சார மோட்டர்கள் உற்பத்தி செய்து விற்பனையாகி யுள்ளன. இதன் சிறப்புக்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்?

முற்றிலும் மூடப்பட்டதும் விசிறியால் குளிரடைவதுமான இந்த மோட்டர், மேற்கு ஜேர்மன், E. BLUM KG தாபனத்தின் தொழில் நுட்பக் கட்டிணைப்புடன் தரமான உறுப்புக்களைக் கொண்டு, அரசாங்கத்தின் அங்கீகாரம் கொண்ட ஜினசேன இலெக்ட்ரிக் மோட்டர்ஸ் லிமிட்டெட்டால் உற்பத்தி செய்யப்பட்டவை.

''ஜெம்'' மின்சார மோட்டர்கள் 1/4 எச். பி. முதல் 15 எச் பி வரையிலும், 950 ஆர். பி. எம். முதல்3000ஆர். பி. எம். வரையிலான வேகத்திலும் பல்வேறு ரகங்களில் உண்டு.

யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும், பின்வரும் எமது பிரதான விநியோகத்தர்களிடமும் கிடைக்கும்:

நியூடோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143. ஸ்டேன்லி ரோட்
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 7016.

ஜினசேன லிமிட்டெட்
இல. 4, ஹுனுப்பிட்டி ரோட்,
கொழும்பு 2. தொலைபேசி: 26558 - 9.

MelADS

Rio (Jaffna)
Phone 7607
Daily 4 Shows
ANIMAL
(Full length Comedy)
Family Entertainment

வெஸ்லி
(காங்கேசன்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன்-பத்மபிரியா
உறவு சொல்ல ஒருவன்

இன்றுமட்டும்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30&9-45
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி
(கலர்) (புதிய பிரதி)

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-தேவிகா நடித்த
இதயத்தில் நீ
(புதிய பிரதி)

13-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 488
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா நடித்த
எதிரொலி
(புதிய பிரதி)

REGAL (Jaffna)
3rd CROWDED WEEK
Daily 3 Shows
4-30, 7-00 & 9-30 p.m only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

ராணி [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
டி. ஆர். மகாலிங்கம்
ஸ்ரீ வள்ளி
(புதிய பிரதி—கலர்)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி: 2-30, 6-30&9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
கல்யாணம் பண்ணிப்பார்
(புதிய பிரதி)

லிடோ [யாழ்.நகர்]
போன்: 7638
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமாரி - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

சாந்தி
போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
விநோத் கன்னா... கபீர் பேடி...
மௌசமி சட்டர்ஜி...
"கச்சே டாக்" -ஹிந்தி கலர்
Next: "GORA AUR GALA" Hindi Color

உதைபந்தாட்டம்

# பாஷையூர் - நாவாந்துறை இன்று மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

விளையாட்டமைச்சின் ஆதரவில் யாழ். உதவி அரசாங்க அதிபரினால் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

வலைப்பந்தாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் ஆங்கில திருக்குடும்ப கன்னியர் மடமும், கரபந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவிலும், ஆண்கள் பிரிவிலும் யாழ். சிங்கள மத்திய மகா வித்தியாலயமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## உதைபந்தாட்ட சாம்பியன்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்டுவந்த 22 வயதுக்குட்பட்டவர்களின் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்த சாம்பியன் மோதலில் பாஷையூர் சென். அன்ரனிஸ் சனசமூக நிலையக் கோஷ்டியும், நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையக் கோஷ்டியும் மோதுகின்றன.

## மெய்வல்லுநர் போட்டி

சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 31-ம் திகதி, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டிகளும் அடுத்த மாதம் 3-ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. ஏ. ரி. டேவிற் சின்னையா செய்து வருகிறார்.

## முதலிடம்



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட வைரவிழாவை முன்னிட்டு அண்மையில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய மண்டபத்தில் வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டியில், மேற்பிரிவில் செல்வன் ஜெ. கிறிஸ்ரி ரிஷிகரன் முதலிடம் பெற்றார். இவர் "மனிதனுக்கு விஞ்ஞானமாற்றும் சேவைகள்" என்னும் விடயம்பற்றி உரையாற்றினார்.

எதிர்வரும் புதுவருட தினத்தன்று நடைபெறவிருக்கும் மேற்படி வைரவிழா பரிசளிப்பு வைபவத்தின் போது இவர் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளதுடன், அன்று இவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.

ஜெ. கிறிஸ்ரி ரிஷிகரன் 1973ம் ஆண்டில் வடமாகாண ஆசிரியர் சங்கத்தினராலும், யாழ். பட்டின ஆசிரியர் சங்கத்தினராலும் வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்ட இரு ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்றதுடன், 1975ம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களிடையே நடாத்திய ஆங்கில விவாதப் போட்டியிலும் இரண்டாம் இடத்தினைத் தட்டிக்கொண்டார்.

பத்தாவத்தை, இளவாலையைச் சேர்ந்த திரு. ஆர். ஜே. ஜெயரட்ணம்- சத்தியவதி தம்பதிகளின் இரண்டாவது புதல்வரான இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினதும் யாழ். இந்துக் கல்லூரியினதும் பழைய மாணவராவார். (இ)

நாகம்ஸ்
[கன்னாகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் - ராதா சலுஜா
இதயக்கனி

# 'விளையாட்டுமைதானமில்லாக் குறை நீங்கவேண்டும்'

## சென். மேரிஸ் பரிசளிப்பு விழாவில் யாழ். எம். பி.

[யாழ்ப்பாணம்]

"விளையாட்டுக்களை நடாத்த நல்ல விளையாட்டு மைதானம் வேண்டும். இப்பாடசாலையில் சிறந்த விளையாட்டு வீரர்கள் இருந்தும் அவர்கள் விளையாடுவதற்கு ஒரு மைதானம் இல்லாதது பெருங்குறையாகும் யாழ். நகரில் போதிய இடவசதி இல்லாததால்தான் இக்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. யாழ்.நகரிலுள்ள வேறொரு பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாததால் அப்பாடசாலைக்கு அயலிலுள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டு விளையாட்டு மைதானமாக்கப் பட இருக்கிறது. சுவீகரிக்கப்படும் அக்காணி ஒரு பாடசாலையின் விளையாட்டு மைதானமாக மட்டுமில்லாது விளையாட்டு மைதானமில்லாத இக்கல்லூரிக்குமான பொதுவிளையாட்டு மைதானமாக ஆக்கப் படல்வேண்டும்"

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனித மரியாள வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்டு பேசிய யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

திரு யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மாணவர்கள தங்கள உடல் வலிமையையும், திறமையையும்காட்ட விளையாட்டுக்கள மிகமுக்கியம். விளையாட்டில் பங்குபற்றி வெற்றி பெறாத மாணவர் தங்கள தோல்வியை எண்ணிதுவண்டு விடாது, அடுத்துத்தாமும் வெற்றிபெற முயற்சிக்கவேண்டும். முயற்சியின் மூலம் வெற்றிபெறுபவன் நாட்டின் சிறந்தவழிகாட்டியாக அமைய முடியும். வெற்றி அடைந்தவனைக்கண்டு தோல்விஅடைந்தவன் பொறாமைப்படுவதால் அவன் வாழ்வில் முன்னேற முடியாது"

"பாடசாலைகளின் முன்னேற்றத்திற்குப் பாடசாலை மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் முயற்சி மட்டும் போதாது, சிறந்த அதிபரும் அமையவேண்டும் இப்பாடசாலைக்கு ஒரு தலைசிறந்த அதிபர் கிடைத்துள்ளதால் இப்பாடசாலை துரிதகதியில் முன்னேற்றம் அடைந்துள்ளது"

கல்வி அதிகாரி திரு. எஸ். சிவபாதம், சட்டத்தரணிகள திரு. எஸ். எஸ் பிரான்சிஸ், ஏ. அன்ரனி, பாடசாலை அதிபர் திரு. வெ, வில்லியம் ஆகியோரும் பேசினர்.

திருமதி யோகேஸ்வரன் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். சென் திரேசா, சென் அன்ரனிஸ், சென் ஜோசெப் ஆகிய இல்லங்கள முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப்பெற்றன.

## இன்றைய திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி மகோற்சவம் 5ம் நாளாகிய இன்று முருகப்பெருமான் வள்ளி தேவயானை சமேதராக காலை 9 மணிக்கு பூஜையாகி மஞ்சத்தில் உள் வீதிவலம் வந்தும், மாலை 6-30 மணிக்கு பூஜையாகி காமதேனு வாகனத்தில் வெளி வீதிவலம் வந்தும் காட்சி கொடுத்து அருளுவார். [கொ]

கிறீன்பீல்ட் கழக

## 'ஐந்து ஓவர்' கிரிக்கெட் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம், எதிர்வரும் ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு புதிய முறையிலான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியொன்றை அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தப் புதிய முறையிலான 'மென்பந்துப் போட்டியில் ஆறு வீரர்கள் மட்டுமே பங்கு பற்றலாம் ஒவ்வொரு கோஷ்டியும் '5 ஓவர்'கள் மாத்திரமே பந்து வீச அனுமதிக்கப்படுவார்கள்.

மேற்படிப் போட்டி, எதிர்வரும் ஈஸ்டர் பண்டிகையன்று யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி 'நொக்கவு' முறையில் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே எதுவித நிபந்தனைகளுமின்றி நடாத்தவிருப்பதாக, கிறீன்பீல்ட் கழகச் செயலாளர் திரு ஜி எஸ். அமலதாஸ் தெரிவித்தார்.

## அபிவிருத்தி செய்யப்படும்

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்திலுள்ள முக்கிய ஆறுகளில் ஒன்றான வழுக்கை ஆற்றை அபிவிருத்தி செய்யுமுகமாக இவ்வருட பண்முகப்படுத்தப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தின் கீழ் 98 ஆயிரத்து 500 ரூபாவை வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு தா திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார். அராலிக் கடலில் விழும் இந்த வழுக்கை ஆற்றுப் பகுதியில் சில இடங்களில் அணைகளை கட்டவும், கிளை வாய்க்கால்களை நிறுவவும் இந்த நிதி பயன் படுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [ஈ]

# மொழியாலும், பிறையாலும் ஒன்றுபட்ட இந்து - இஸ்லாமியர்கள்!

## பாராட்டுவிழாவில் துணைவேந்தர் 'வித்தி'

[யாழ்ப்பாணம்]

''முஸ்லிம்கள் மத்தியில் பலரும் பணம்படைத்தவர்கள் வியாபாரிகள், கொடைவள்ளல்கள் எல்லாம் இருந்த போதிலும், போதிய கல்விமான்கள் இல்லாதது பெரும் குறையாகும்'' என்று யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தனுக்கு யாழ் முஸ்லிம் மக்களால் அளிக்கப்பட்ட பாராட்டுவிழாவில் யாழ். எம். பி திரு வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறினார்.

இப்பாராட்டு வைபவம் ஜனாப் மன்சூர் தலைமையில் நடைபெற்றது. பெரும் தொகையான பெண்களும் கலந்துகொண்டனர். யாழ் எம். பி. திரு யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இம்முறை வெளியான க. பொ. த பரீட்சையில் யாழ். முஸ்லிம்களின் பெறுபேறுகள் மிகவும் குறைவாகக் காணப்பட்டுள்ளது. சகல கல்வி வசதிகளையும் கொண்ட யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் கல்வியில் முன்னேறவில்லை என்றால் அது மிகவும் கவலைக்குரியது. இளம் சந்ததியினரின் முன்னேற்றம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடம்தான் தங்கியுள்ளது. முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் முஸ்லிம மாணவர்களின் முன்னேற்றத்தில் கூடுதல் அக்கறை செலுத்த முன்வரவேண்டும்.

''யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்ட சிலகாலத்திற்குள்ளாகவே துணைவேந்தரின் முயற்சியால் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாக மாறியுள்ளது இப்பல்கலைக்கழகத்தில் தென் இலங்கையைச் சேர்ந்த பல முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயிலும்போது யாழ் முஸ்லிம்கள் அங்கு இல்லாதது மிகவும் வேதனைக்குரியது. முஸ்லிம் பெரியார்கள் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு அவர்களைச் சிறந்த கல்விமான்களாக்க முன்வரவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் யாழ் முஸ்லிம்கள் இல்லை என்ற நிலை மாறி முஸ்லிம் மாணவர்களுக்கு அங்கு போதிய இடவசதி இல்லை என்று கூறுமளவிற்கு அவர்கள் கல்வியில் முன்னேறவேண்டும்'' என்றும் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் பேசுகையில் ''இஸ்லாத்தினர் பிறையைக் காணாமல் எதையும் செய்யமாட்டார்கள். அதேபோல் இந்துக்களான நாமும் பிறையையே முக்கியமாகப் பேணி வணங்குகிறோம். மொழியால் ஒன்றுபட்ட நாம் பிறையாலும் ஒன்றுபட்டுள்ளோம் அதனால் தான் இஸ்லாமியருடைய வரலாற்றைப்பற்றி அவர்களுடைய கலை கலாச்சாரத்தைப் பற்றி, வணிகத்துறையை... சட்டத்துறையை ... சமயத்துறையைப்பற்றி எல்லாம் ''கலையும் பண்பும்'' என்ற நூலில் எழுதும்போது என்னுடைய பெயரை 'பிறை அன்பன்' என்ற புனைபெயரில் எழுதினேன் அப்புத்தகத்தை எழுதும்போது முஸ்லிம்மக்கள் மத்தியிலிருந்து எந்தவிதமான எதிர்ப்பும் வருமோ என்று பயந்துகொண்டே எழுதினேன், அதற்கு மாறாக முஸ்லிம்கள் அப்புத்தகத்துக்கு நல்ல வரவேற்புக்கொடுத்துள்ளனர். அதன்பயனாக இரண்டாவது பிரசுரமும் வெளியிடவேண்டி ஏற்பட்டது'' என்று கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய பண்பாட்டுத்துறை உள்ளது. தற்போது அரபு மொழியும் கற்பிக்கப்படுகின்றது. இக்கல்வியைப் பயில்வோர் முஸ்லிம்கள் வாழும் இடங்களுக்குச் சென்று அவர்களின் கலை, கலாச்சாரம், வாழ்க்கை முறை ஆகியவை பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இதற்கான செலவுகளை பல்கலைக்கழகம் ஏற்றுள்ளது. பல்கலைக்கழகத்தில் அரபு இஸ்லாமிய நாகரீகத்துறையோடு இந்துநாகரீகம் பற்றியும் கற்பிக்கப்படுகிறது. அரபு இஸ்லாமிய நாகரீகத்தை தமிழ் மாணவர்கள் விரும்பி கற்கிறார்கள். இந்து நாகரிகத்துறை பற்றி கிறிஸ்தவர்கள் விரும்பி கற்கிறார்கள். அதே போல் இஸ்லாமியரும் இந்து கலாச்சாரத்தை விரும்பிப் படிக்க முன்வருவதன் மூலம் நாட்டில் ஒற்றுமையை உண்டு

### ''முஸ்லிம்கள் மத்தியில் கல்விமான்களும் தோன்றவேண்டும்''

— யோகேஸ்

பண்ணுவதோடு ஒரு மதத்தினரைப் பற்றி மற்ற மதத்தினர் புரிந்துகொள்ளவும் முடியும். இவ் ஒற்றுமையை மேலும் பலப்படுத்த கிறிஸ்தவ கலாச்சாரத்தையும் அடுத்த ஆண்டு தொடக்கம் யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். சகல வசதிகளும் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் அரபு இஸ்லாமிய நாகரீகம் கற்பிப்பதைத் தடை செய்ய ஒரு சில அரசியல்வாதிகள் முனைந்தனர். அவர்களுக்கு ஆதரவாக சில இஸ்லாமிய மாணவர்களும் சேர்ந்துகொண்டனர்' அதை நாம் வன்மையாகக் கண்டித்துள்ளோம். அரபு மொழியும் இஸ்லாம் பண்பாடும் யாழ் பல்கலைக்கழகத்தில் சிறந்த முறையில் அமையும் என்றும் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

அகில இலங்கை வாலிபமுஸ்லிம்களின் சங்கத் தலைவர் கலாநிதி கே. எம். எச். காலிதீன் உரையாற்றுகையில், ''அரேபியர்கள் முதலில் தென் இந்தியாவிலும் பின்னர் இலங்கையுடன் தொடர்பு கொண்டனர் அக்காலத்தில் ஈழத்தின் வடபகுதியையும், தென்பகுதியையும் கூட ஆரியரே ஆண்டனர். அரேபியர் ஈழத்திற்கு வந்தபோது ஆரிய மன்னர்கள் தமிழிலேயே பேசினர். அக்காலத்திலேயே தமிழ் எங்கும் வியாபித்திருந்தது அதனால் அன்று தொட்டு இன்றுவரை தென் இலங்கையிலானாலும் சரி வடபகுதியிலானாலும் சரி வாழும் முஸ்லிம்கள் தமிழிலேயே தமது தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்று கூறினார்.

''இதுவரை எந்த முஸ்லிம் பெருமகனும் தனது இனத்தின் வரலாற்றை சரியாக அறியாதிருக்கும் வேளையில் முஸ்லிம் மக்களைப் பற்றி, அவர்களின் பண்பாடு, கலை கலாச்சாரத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து, அவர்களுடைய வரலாற்றைத் தொகுத்து நூல்வடிவாக்கி சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர் துணைவேந்தர் வித்தியானந்தன் முஸ்லிம் சமுகத்தின் மேல் இவ்வளவு அக்கறை கொண்ட ஒரு தமிழ்ப் பெருமகனுக்கு நாம் பாராட்டு விழா எடுப்பதில் எந்தவித வியப்புமில்லை'' என்றும் அவர் கூறினார்.

சட்டத்தரணி ஆர். எம். இமாம் உரையாற்றுகையில், மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர் நாம். எம்மிடம் இருந்து தமிழையும், தமிழரிடமிருந்து எம்மையும் பிரிக்க எவராலும் முடியாது. தொன்று தொட்டு வளர்ந்து வரும் தமிழை அழிக்க எவராலும் முடியாது. தென் இலங்கையில் சிங்கள சமூகத்தவரோடு நாம் வாழ்ந்தாலும், நாம் தமிழையே கற்றுத் தமிழையே பேசுகின்றோம். இதன்மூலம் தென் இலங்கையில் தமிழை பாதுகாத்து வருபவர் முஸ்லிம்கள் என்றால் அதை யாரும் மறுக்கமுடியாது. முஸ்லீம்களின் கல்வி வசதிக்காக துணைவேந்தர் வித்தியானந்தன் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அப்படியிருந்தும் முஸ்லீம்கள் கல்வியில் அக்கறையில்லாமல் இருப்பது வேதனைக்குரியது. இந்நிலை மாறவேண்டும்'' என்றும் கூறினார்.

திரு. எம். ஏ. எம். குத்தூஸ் பேசுகையில், ''பேராசிரியர் 'வித்தி' இஸ்லாம் மதத்திற்கு ஆற்றிய சேவைக்கு யாழ். முஸ்லிம்கள் மட்டுமல்ல நாடு முழுவதும் வாழுகின்ற முஸ்லீம்கள் ஒன்றுசேர்ந்து பாராட்டினாலும் அவர் எமக்கு ஆற்றிய சேவைக்கு ஈடாகாது. அவர் ஒரு தமிழராக, இந்துமதத்தவராக இருந்தபோதும், தென்இந்தியாவில் காயல்பட்டினத்தில் நடைபெற்ற அகில உலக இஸ்லாமிய ஆராய்ச்சி மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் ஒரு நாள் விழாவுக்குத் தலைமை தாங்கிய பெருமையும் திரு. வித்திக்குரியது. அத்தகைய ஒரு சிறந்த அறிவாளியைப் பெற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் எம்மவர் கல்வி பயில்வது மிகவும் குறைவாக உள்ளது, கவலைக்குரியது'' என்று கூறினார்.

ஜனாப் எம். எம். பௌசி பேசுகையில் 'தமிழினத்தின் வளர்ச்சிக்காக அவர் தம் கலை கலாச்சாரத்திற்காக எவ்வளவோ தொண்டாற்றியபேராசிரியர் வித்தியானந்தன் முஸ்லிம்களை மறவாது அவர்களின் கலை, கலாச்சாரத்தில் வளர்ச்சிக்காக எவ்வளவோ சேவையாற்றியுள்ளார்'' என்று கூறினார்.

ஜனாப் எம் எம் ஏ றஸீம் வாழ்த்துப்பத்திரம் வழங்கினார்; உயர்நீதிமன்றநீதிபதி ஜனாப் ஜமீல், அல்ஹாஜ் மீரூன் மொகிதீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(கொ. நி)

## பாராளுமன்ற...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மொழி பெயர்ப்புடன் வெளிவரவேண்டும் என்று வாதிட்டார்.

இன்று உங்களுடன் சேர்ந்துகொண்ட திரு. இராசதுரையினால்கூட அரசகரும மொழியைப் புரிந்து கொள்ள முடியாதே என்று திரு. எம். சிவசிதம்பரமும் பண்டிதர் திரு கா. பொ. இரத்தினமும் வாதிட்டனர். ஈற்றில், பிரதமர் ஆர். பிரேமதாசா; தற்போது நடைமுறையிலிருப்பதுபோல் பேசப்படும் மொழிகளிலேயே தொடர்ந்தும் வெளிவரட்டும் என்று தெரிவித்ததை சபை ஏற்றுக்கொண்டது.

தேர்தலின் பின்னர் சபை முதன்முதலாகக்கூடும் போதும் செயலாளர் நாயகத்தின் தலைமையின்றி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுள் எம். பி. யாக நீண்டகால அனுபவத்தைப் பெற்றவர் சபைக்கு தலைமைதாங்க வேண்டுமென்ற திரு சிவாவின் மற்றொரு பிரேரணையும் நிராகரிக்கப்பட்டது. [ம]

## ★ ''மீண்டும் தென் இந்திய இலக்கியக் குப்பைகள்!

# நமது கலை இலக்கியத்திற்கு ஏற்பட்டுள்ள பெரிய ஆபத்து

## கலை இலக்கியப் பெருமன்றம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''என்றுமில்லாத வகையில் தென்இந்திய இலக்கியக் குப்பைகள் நமது நாட்டுக்குத் தருவிக்கப்படுவதும், கூட்டுத் தயாரிப்புகள் என்ற பெயரில் சினிமாக்கள் இங்கு தயாரிக்கப்படுவதும், நமது கலை இலக்கியத் துறையை தென் இந்தியாவின் கலை இலக்கிய 'கொலனி'யாகமாற்ற எடுக்கும் பயங்கர நடவடிக்கையாகும்'' என்று மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி உயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பெருமன்ற விஸ்தரிப்புக் கூட்டத்தில், திருவாளர்கள் கே. டானியல், நல்லை அமிழ்தன், தேவி பரமலிங்கம் ஆகியோரால் வெளியிடப்பட்ட மேற்கண்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''இலக்கியத் தரமில்லாத இந்த ஆபாசக் குப்பைகளின் திடீர் இறக்குமதி நமது நாட்டின் கலை இலக்கியத் துறைக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிட்டது!

''எமது நாட்டில் தமிழில், சமுதாய மாற்றத்திற்கான கலை இலக்கியங்கள் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களாகிய நாம் வயதில் வேறுபட்டவர்களாயினும் அன்று முதல் இன்றுவரை நோக்கத்தில் ஒன்றுபட்டவர்களாக இருப்பதால், ''அன்றையிலிருந்து இன்றையவரை'' என்ற வரம்புக்குள் ஒன்றாகவே இருக்கிறோம். அத்துடன் இந்த நாட்டின் இலக்கியப் பரப்பில் சரியான கொள்கை உடையவர்களாகவும், எண்ணிக்கையில் பெரும்பான்மை உடையவராகவும் இருக்கின்றோம்.

''இலக்கியம் என்று வெளிப்படுபவை யாவும் அன்றாட வாழ்க்கையிலிருந்தே பெறப்பட்டு, மிகமிக எளிமைப்படுத்தப்பட்டு மக்கள் பரப்பிற்கே செல்லவேண்டும் என்பது உலகம் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். இன்று இக்கருத்து இங்கே மீறப்படுறது. மக்களிடம் எவ்விதத் தொடர்புமின்றி - ஒட்டுறவுமின்றி வாழ்க்கை வசதிக்காக மொழியையும் கலையையும் முதலாளித்துவப் பரப்பில் 'படித்தவர்கள்' எனப்படுவோர், ''இது மக்கள்கலை இலக்கியம்'' எனச் சொல்லிக்கொண்டு எழுதுவதும், பேசுவதும், மேடை ஏற்றுவதும் தம்மிடமிருந்துதான் கலை இலக்கியங்களைக் கற்கவேண்டும் என்று அபயாவம் கொள்வதும், தமது இலக்கியப் படைப்புக்கள் முடிந்தவரை மக்களுக்கு விளங்காமல் இருப்பதே நல்லதென்றுவைத்துக்கொள்வதும், முடிந்தவரை தங்கள் சதுப்படைப்புக்களை மேல்தட்டுவர்க்கத்தினரின் வர்க்க நலன்களுக்காக பயன்படுத்துதலும்இன்று நடை முறைச் சாட்சிகளாக நிற்கின்றன' என்றஇந்தஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது

## மூன்று

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் நவகுண்ட சகித சங்காபிஷேகமும் மகேஸ்வர பூசையும் இன்று நடைபெறுகிறது. நவகுண்ட சகித அஷ்டோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் விசேஷ பூசை, அர்ச்சனைகளும் நடைபெறும்.


## நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியையும்

சி. பெ. இராசகோபாலன்
தோற்றம்: 09-06-1936
மறைவு: 01-10-1978

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி, திரு. சி. பெ. இராசகோபாலன் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கட்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அந்தியேட்டிக் கிரியைகள் இன்று நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

திரு. பெரியதம்பியும் பாரியாரும்,
76, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
2013


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu; Telephone: 389.